**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

72

# TAMIL

# POETICAL ANTHOLOGY.

இஃது

ம-ள-ஸ்ரீ-துரைத்தனத்தாராலே ஆதரிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில்
படிக்கிறவர்கள் எளிதில் தமிழ் இலக்கியத்தைக்
கற்றறியும்பொருட்டாகச் செய்யப்பட்ட

# தமிழ்ச்செய்யுட் கலம்பகம்.

பல சொல்லக் காமுறுவர், மன்ற, மாசற்ற
சில சொல்ல றேற்றாதவர்.

PUBLISHED BY ORDER OF THE DIRECTOR OF PUBLIC INSTRUCTION.

MADRAS:
PRINTED AT THE FOSTER PRESS,
BY CALEB FOSTER.
1868.

# செய்யுள் அகராதி.


| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| அகரமுதலவெழுத்து ... ... | 1 | குறள். | 1 |
| அகழ்வாரைத்தாங்கு ... | 51 | குறள். | 298 |
| அஃகிஅகன்றஅறி ... ... | 31 | குறள். | 182 |
| அங்கண்விசும்பின் ... ... | 82 | நாலடி. | 484 |
| அச்சமுடையார்க்கரண் ... ... | 78 | குறள். | 458 |
| அச்சமேகீழ்களது ... ... | 83 | குறள். | 490 |
| அஞ்சுவதஞ்சாமை ... ... | 60 | குறள். | 352 |
| அஞ்சுவதோரும் ... ... | 32 | குறள். | 186 |
| அடக்கமமரருள் ... ... | 42 | குறள். | 243 |
| அடக்கமுடையார் ... ... | 41 | மூதுரை. | 237 |
| அடுக்கன்மலைநாட ... ... | 72 | நாலடி. | 425 |
| அடுத்துமுயன்றாலும் ... | 91 | மூதுரை. | 536 |
| அட்டாலும்பால்சுவையிற் ... | 80 | மூதுரை. | 468 |
| அட்டுண்டுவாழ்வார்க் ... | 68 | அறநெறிச்சாரம். | 398 |
| அமிழ்தினுமாற்ற ... ... | 87 | குறள். | 509 |
| அமைந்தாங்கொழுகான் ... | 64 | குறள். | 374 |
| அரங்கின்றிவட்டாடி ... ... | 6 | குறள். | 30 |
| அரம்பொருதபொன் ... | 67 | குறள். | 395 |
| அரியவொன்றாகாத ... ... | 78 | குறள். | 460 |
| அருகலதாகிப் ... ... | 62 | நாலடி. | 361 |
| அருமையுடைய ... ... | 44 | பழமொழி. | 260 |
| அருமையுடைத்தென் ... | 37 | குறள். | 217 |
| அரும்பயனாயும்அறி ... ... | 66 | குறள். | 388 |
| அருவினையென்ப ... ... | 92 | குறள். | 539 |
| அருள்சேர்ந்தநெஞ் ... ... | 85 | குறள். | 498 |
| அருட்செல்வஞ்செல் ... | 85 | குறள். | 497 |
| அருளில்லார்க்கவ்வுலகம் ... | 85 | குறள். | 501 |
| அருளின் அறமுரைக்கும் ... | 7 | நாலடி. | 37 |
| அலகுசால்கற்பின் ... ... | 5 | நாலடி. | 29 |
| அல்லல் அருளாள்வார் ... | 85 | குறள். | 500 |
| அல்லற்பட்டாற்று ... ... | 89 | குறள். | 525 |
| அல்லவைதேய ... ... | 95 | குறள். | 561 |
| அவாவில்லார்க்கில் ... ... | 32 | குறள். | 187 |
| அவ்வியநெஞ்சத்தான் ... | 67 | குறள். | 394 |
| அழன்மண்டுபோழ்தின் ... ... | 72 | நாலடி. | 424 |
| அழிவதூஉம்ஆவதூஉம் ... | 63 | குறள். | 367 |
| அழுக்காறவாவெகுளி ... ... | 40 | குறள். | 235 |
| அழுக்காறுடையார்க் ... | 67 | குறள். | 392 |
| அழுக்காறுடையான்கண் ... ... | 54 | குறள். | 318 |
| அ[illegible]தான் ... | 74 | குறள். | 434 |
| அ[illegible]ந்தீர்நெஞ்சத் ... ... | 75 | குறள். | 445 |
| அளவறிந்[illegible]வாழாதான் ... | 64 | குறள். | 378 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| அள்ளிக்கொள்வன்ன ... ... | 62 | நாலடி. | 362 |
| அறங்கூறுனல்ல ... ... | 56 | குறள். | 326 |
| அறஞ்சொல்லுநெஞ்சத் ... ... | 56 | குறள். | 329 |
| அறத்தான்வருவதே ... ... | 40 | குறள். | 236 |
| அறத்தினூங்காக்கமு ... ... | 40 | குறள். | 232 |
| அறனாக்கம்வேண்டாதா ... | 67 | குறள். | 391 |
| அறிவின்அறநெறி ... ... | 9 | நாலடி. | 53 |
| அறிவினானாகுவதுண்டோ ... | 71 | குறள். | 416 |
| அறிவுடையார்அன்றி ... ... | 34 | நன்னெறி. | 199 |
| அறிவுடையார்ஆவதறி ... | 60 | குறள். | 351 |
| அறிவுடையார்எல்லாம் ... ... | 60 | குறள். | 353 |
| அறுசுவைஉண்டி ... ... | 24 | நாலடி. | 134 |
| அறைபறையன்னர் ... ... | 66 | குறள். | 390 |
| அற்றகுளத்தின் ... ... | 9 | மூதுரை. | 48 |
| அற்றவரென்பார் ... .. | 32 | குறள். | 185 |
| அற்றாரழிபசி ... ... | 46 | குறள். | 272 |
| அன்பகத்தில்லா ... ... | 84 | குறள். | 495 |
| அன்பிலாரெல்லாந் ... ... | 84 | குறள். | 49[illegible] |
| அன்பிற்கும்உண்டோ ... ... | 84 | குறள். | 491 |
| அன்பின்வழியதுயிர் ... ... | 84 | குறள். | 496 |
| அன்போடியைந்த ... ... | 84 | குறள். | 493 |
| ஆகாதெனினும் ... ... | 62 | நாலடி. | 366 |
| ஆக்கங்கருதி ... ... ... | 63 | குறள். | 368 |
| ஆக்கும்அறிவான் ... ... | 80 | நன்னெறி. | 473 |
| ஆடுகோடாகி ... ... ... | 36 | நாலடி. | 210 |
| ஆட்பார்த்துழலும் ... ... | 25 | நாலடி. | 145 |
| ஆய்ந்தாய்ந்து ... ... ... | 16 | குறள். | 90 |
| ஆலைவாய்க்கரும்பின் ... | 99 | கம்பர்பாடல். | 590 |
| ஆவாநாம்ஆக்க... ... ... | 53 | நாலடி. | 311 |
| ஆவேறுருவின ... ... | 57 | நாலடி. | 336 |
| ஆறிடுமேடுமடுவும் ... ... | 30 | நல்வழி. | 175 |
| ஆறுபாயமலை ... ... | 99 | கம்பர்பாடல். | 586 |
| ஆற்றங்கரையின் ... ... | 97 | நல்வழி. | 568 |
| ஆற்றின்வருந்தா ... ... | 64 | குறள். | 377 |
| ஆற்றுப்பெருக்கற் ... ... | 81 | நல்வழி. | 475 |
| ஆற்றுவாராற்றல் ... ... | 46 | குறள். | 271 |
| ஆன்படுநெய்பெய் ... ... | 14 | நாலடி. | 81 |
| இசையுமெனினும்இசையா ... | 82 | நாலடி. | 485 |
| இசையாவொருபொருள் ... ... | 57 | நாலடி. | 332 |
| இசையாதெனினும்... ... | 72 | நாலடி. | 422 |
| இடம்படமெய்ஞ்ஞானம்... ... | 57 | நாலடி. | 335 |
| இடனில்பருவத்து ... ... | 46 | குறள். | 267 |
| இருளோஅறுகாமறை ... ... | 98 | தேம்பாவணி. | 574 |
| இருக்கைஎழலும் ... ... | 81 | நாலடி. | 479 |
| இருமைவகைதெரிந் ... ... | 83 | குறள். | [illegible] |
| இ[illegible]ீங்கியின்பம்பய ... | 59 | குறள். | [illegible]44 |
| இலங்கு[illegible]த்தன் ... ... | 13 | நாலடி. | [illegible]2 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| இல்லதென் இல்லவள் ... | 94 | குறள் | 553 |
| இலமென்று வெஃகுதல் ... ... | 31 | குறள். | 181 |
| இல்லாளகத்திருக்க... ... | 93 | மூதுரை. | 545 |
| இல்லையுண்டென் ... ... | 102 | தாயுமானவர். | 610 |
| இழுக்கலுடையுழி ... ... | 35 | குறள். | 202 |
| இழுக்குடையபாட்டிற் ... ... | 81 | நல்வழி. | 477 |
| இழைத்தநாள் ... ... | 24 | நாலடி. | 138 |
| இளையான் அடக்கம் ... ... | 48 | நாலடி. | 279 |
| இளையமுதுதவம் ... ... | 28 | நீதிநெறி. | 165 |
| இறந்தவெகுளியிற் ... ... | 78 | குறள். | 456 |
| இறப்பவேதீயசெயினு ... | 12 | நாலடி. | 69 |
| இறப்பச்சிறிதென்று ... ... | 44 | நாலடி. | 256 |
| இறைகாக்கும் .. ... | 89 | குறள். | 522 |
| இற்சார்வின்னுமாந் ... ... | 27 | நாலடி. | 156 |
| இற்பிறப்பெண்ணி ... ... | 10 | நாலடி. | 56 |
| இனநன்மையின்சொல் ... | 82 | நாலடி. | 481 |
| இனம்போன்றினமல்லார் ... | 18 | குறள். | 103 |
| இன்பம்விழையான் ... ... | 38 | குறள். | 219 |
| இன்றிஅமையாச் ... ... | 30 | பழமொழி. | 172 |
| இன்றுகொல்அன்றுகொல் ... | 53 | நாலடி. | 312 |
| இன்றுசெய்தாரை ... | 71 | குறள் | 415 |
| இன்றுசெயினும்விடு ... | 13 | நாலடி. | 71 |
| இன்றுசெயினும் ... ... | 50 | நாலடி. | 295 |
| இன்பம்இடையறு ... ... | 32 | குறள். | 188 |
| இன்பம்பயந்தாங் ... ... | 50 | நாலடி. | 296 |
| இன்றெனைந்தான்உணர்ந் ... | 71 | குறள். | 417 |
| இன்றுகொளர்பால ... ... | 88 | நீதிநெறி. | 516 |
| இன்சொலாலன்றி ... ... | 95 | நன்னெறி. | 557 |
| இனியவர்என்சொலினு ... ... | 95 | நீதிநெறி. | 559 |
| இனியஉளவாக ... ... | 95 | குறள். | 562 |
| ஈட்டும்பொருள் ... ... | 96 | நல்வழி. | 565 |
| ஈதல்அறந்தீவினைவிட் ... | 39 | அவ்வை. | 239 |
| ஈனமாயில்லிருந் ... ... | 36 | நாலடி. | 212 |
| ஈன்றபொழுதிற் ... ... | 87 | குறள். | 514 |
| உடற்குவரும்இடர் ... ... | 80 | நன்னெறி. | 470 |
| உடன்பிறந்தார்சுற்றத்தார் ... | 9 | மூதுரை. | 49 |
| உடாஅதும்உண்ணாதும் ... ... | 25 | நாலடி. | 141 |
| உடுக்கையிழந்தவன் ... ... | 15 | குறள். | 87 |
| உடுப்பதூஉம்உண்பதூஉம் ... | 67 | குறள். | 396 |
| உடைசெல்வம்ஊண் ... | 76 | குறள். | 448 |
| உடைப்பெருஞ்செல்வத் ... ... | 41 | பழமொழி. | 241 |
| உடைமையுள்இன்மை ... | 68 | குறள். | 400 |
| உடையர்எனப்படுவ ... ... | 37 | குறள். | 213 |
| உட்கப்படாஅர் ... ... | 77 | குறள். | 450 |
| உண்டவர்க்கன்றி ... ... | 102 | தாயுமானவர். | 612 |
| [illegible] ... ... | 55 | நன்னெறி. | 325 |
| [illegible] ... ... | 77 | குறள். | 451 |
| உண்ணான் ஒளிநிறான் ... | 24 | நாலடி. | 140 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| உதவிவரைத்தன்றுதவி ... ... | 21 | குறள். | 121 |
| உபகாரஞ்செய்ததனை ... | 48 | நாலடி. | 283 |
| உரமொருவற்குள்ளவெ ... ... | 38 | குறள். | 223 |
| உருவிற்கமைந்தான்கண் ... | 14 | நாலடி. | 82 |
| உருவுகண்டெள்ளாமை ... ... | 91 | மூதுரை. | 534 |
| உலகத்தோடொட்டவொழுகல் ... | 54 | குறள். | 320 |
| உவப்பத்தலைக்கூடி ... ... | 2 | குறள். | 10 |
| உழுதுண்டுவாழ்வாரே ... | 97 | குறள். | 571 |
| உழுவார்உலகத்தார் ... ... | 97 | குறள். | 570 |
| உளபோல்முகத்தெவன் ... | 86 | குறள். | 505 |
| உளரென்னுமாத்திரையர் ... | 6 | குறள். | 32 |
| உள்ளத்தாற்பொய்யா ... | 58 | குறள். | 339 |
| உள்ளத்தாலுள்ளலுந் ... ... | 75 | குறள். | 438 |
| உள்ளங்கவர்ந்தெழுந் ... | 47 | மூதுரை. | 274 |
| உள்ளமுடைமையுடைமை ... | 37 | குறள். | 214 |
| உள்ளற்கவுள்ளஞ் ... ... | 16 | குறள். | 93 |
| உள்ளியதெய்தல் ... ... | 78 | குறள். | 461 |
| உள்ளுவதெல்லாமுயர் ... | 37 | குறள். | 216 |
| உள்ளூர்இருந்த் ... ... | 39 | அறநெறிச்சாரம். | 229 |
| உறங்குந்துணைய ... ... | 53 | நாலடி | 313 |
| உறினட்டறின் ... ... ... | 17 | குறள். | 97 |
| உறுதிபயப்ப ... ... | 36 | நீதிநெறி. | 207 |
| உறுபுலியூனிரை ... ... | 36 | நாலடி. | 211 |
| உறுவதுசீர்தூக்கு ... ... | 17 | குறள். | 98 |
| உறைப்பருங்காலத்தும் ... ... | 80 | நாலடி. | 472 |
| ஊக்கமுடையான் ... ... | 92 | குறள். | 541 |
| ஊதியமென்ப ... ... ... | 16 | குறள். | 92 |
| ஊரங்கணநீர் ... ... | 10 | நாலடி. | 54 |
| ஊருணிநீர்நிறைந் .. ... | 45 | குறள். | 264 |
| ஊழையுமுப்பக்கம் ... | 38 | குறள் | 224 |
| எட்பகவன்னசிறுமை ... ... | 79 | குறள். | 467 |
| எண்ணித்துணிக ... ... | 63 | குறள். | 370 |
| எண்ணென்பஏனை ... ... | 2 | குறள். | 8 |
| எண்ணக்குறைபடா ... ... | 41 | பழமொழி. | 242 |
| எண்பொருளவாக ... ... | 60 | குறள். | 349 |
| எத்துணையரா ... ... | 4 | நீதிநெறி. | 20 |
| எத்தைநல்கூர்ந்தான் ... ... | 43 | நன்னெறி. | 249 |
| எப்பொருளெத்தன்மைத் ... | 59 | குறள். | 346 |
| எப்பொருள்யார்யார்வாய் .. | 59 | குறள். | 348 |
| எல்லாப்படியா ... ... | 27 | நல்வழி. | 154 |
| எல்லார்க்குந்நன்றாம் ... ... | 42 | குறள். | 246 |
| எல்லாவிளக்கும் ... ... | 58 | குறள். | 342 |
| எவ்வதுறைவதுலக ... ... | 60 | குறள். | 350 |
| எள்ளாதெண்ணி ... ... | 63 | குறள். | 372 |
| என்னாதிருப்ப ... ... ... | 22 | நன்னெறி. | [illegible] |
| எ[illegible]வேண்டுவோன் ... | 75 | குறள். | [illegible] |
| எதிலன்றேறிர்நிற்பான் ... ... | 93 | நல்வழி. | 548 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| எறிநீர்ப்பெருங்கடல் ... | 44 | நாலடி. | 258 |
| எற்றொன்றுமில்லா ... ... | 82 | நாலடி. | 488 |
| எனதெனதென்றிருக்கும் ... | 44 | பழமொழி. | 259 |
| எனைப்பகையுற்றாரும் ... ... | 69 | குறள். | 405 |
| என்றுமுகமன் ... ... | 22 | நன்னெறி. | 124 |
| என்றும்போற்றப்படு ... ... | 98 | தேம்பாவணி. | 583 |
| என்றுஉருகி ... ... | 101 | அதிவீரராமன்பாடல். | 606 |
| என்பிலதனைவெயிற் ... ... | 84 | குறள். | 494 |
| ஏதிலார்குற்றம் ... ... | 56 | குறள். | 331 |
| ஏதிலார்ஆரத்தமர் ... ... | 65 | குறள். | 383 |
| ஏதிலார்யாதும்புகல ... ... | 88 | நீதிநெறி. | 519 |
| ஏற்றகைமாற்றாமை... ... | 44 | நாலடி. | 255 |
| ஐயத்தினீங்கித்தெளி ... ... | 59 | குறள். | 345 |
| ஒத்ததறிவான் ... ... | 45 | குறள். | 263 |
| ஒப்புரவினால்வருங் ... ... | 46 | குறள். | 268 |
| ஒருநன்றிசெய்தவர்க் ... | 20 | நாலடி. | 113 |
| ஒருநாளுணவை ... ... | 27 | நல்வழி. | 155 |
| ஒருநீர்ப்பிறந்தொருங்கு ... | 14 | நாலடி. | 78 |
| ஒருபொழுதும்வாழ் ... ... | 26 | குறள். | 151 |
| ஒல்லுங்கருமம்உடற் ... | 17 | குறள். | 160 |
| ஒல்லும்வகையால் ... ... | 40 | குறள். | 233 |
| ஒழுக்கம்விழுப்பந் ... ... | 54 | குறள். | 316 |
| ஒளிநாக்கொடுவான் ... ... | 98 | தேம்பாவணி. | 582 |
| ஒறுத்தாரைஒன்றாக ... ... | 51 | குறள். | 300 |
| ஒறுத்தார்க்கொருநாளை ... ... | 51 | குறள். | 301 |
| ஒற்றர்தங்களைஒற்ற ... ... | 100 | சிவகசிந்தாமணி. | 597 |
| ஒற்றிற்றெரியா ... ... ... | 88 | நீதிநெறி. | 518 |
| ஒன்றெய்திநூறிழக்கும் ... | 76 | குறள். | 445 |
| ஓதியுணர்ந்தும் ... ... | 65 | குறள். | 382 |
| ஓதியும்ஓதாருணர் ... ... | 8 | நாலடி. | 44 |
| கடலோடாகால்வ ... ... | 92 | குறள். | 543 |
| கடுக்கியொருவன் ... ... | 55 | நாலடி. | 322 |
| கடையாயார் ... ... ... | 11 | நாலடி. | 63 |
| கணங்கொண்டுசுற் .. ... | 28 | நாலடி. | 161 |
| கணமலைநன்றுடை ... ... | 55 | நாலடி. | 323 |
| கண்கூடாப்பட்டது ... ... | 8 | நீதிநெறி. | 43 |
| கண்டகனுக்கு ... ... | 102 | தாயுமானுர். | 611 |
| கண்ணிற்கணி ... ... | 86 | குறள். | 506 |
| கண்ணின்றுகண்ணற ... ... | 56 | குறள். | 328 |
| கண்ணுடையரென்பவர் ... | 2 | குறள். | 9 |
| கண்ணொட்டத்துள்ள ... ... | 86 | குறள். | 503 |
| கண்டட்டுற்ங்கக் ... ... | 98 | தேம்பாவணி. | 576 |
| கருத்துணர்ந்து ... ... | 10 | நாலடி. | 58 |
| கீ[illegible]... ... | 86 | குறள். | 508 |
| க[illegible]இனும் ... ... | 5 | நாலடி. | 28 |
| கல்லாதுநீண்ட ... ... | 61 | நாலடி. | 359 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| கல்லாதவருநனி ... ... | 6 | குறள். | 31 |
| கல்லாதமாந்தர்க்குக்... ... | 3 | மூதுரை. | 18 |
| கல்லாதமாந்தருக்கு ... ... | 93 | மூதுரை. | 546 |
| கல்லாமையச்சம் ... ... | 82 | நாலடி. | 480 |
| கல்லெறிந்தன்ன ... ... | 48 | நாலடி. | 280 |
| கல்வியாளுயகழிநுட்ப ... | 7 | பழமொழி. | 39 |
| கல்விகரையில... ... ... | 5 | நாலடி. | 25 |
| கவையாகிக்கொம்பாகி ... | 3 | மூதுரை. | 14 |
| கழாக்காற்பள்ளி ... ... | 65 | குறள். | 384 |
| கழிந்தாரிடுதலை ... ... | 52 | நாலடி. | 309 |
| கழுநீருட்காரட ... ... | 11 | நாலடி. | 64 |
| களவின்கட்கன்றிய ... ... | 75 | குறள். | 442 |
| களவினாலாகியஆக்கம் ... ... | 75 | குறள். | 439 |
| களவென்னுங்காரறி ... | 75 | குறள். | 441 |
| களர்நிலத்துப்பிறந்த ... ... | 5 | நாலடி. | 24 |
| களித்தறியேனென்பது ... | 77 | குறள். | 454 |
| கனித்தநாளில்அரும்பும்... ... | 98 | தேம்பாவணி. | 575 |
| களித்தானைக்காரணங் ... | 77 | குறள். | 455 |
| கற்கசடறக்கற்பவை ... ... | 2 | குறள். | 7 |
| கற்பனவூழற்றூர் ... ... | 4 | நீதிநெறி. | 22 |
| கற்பினவோடொப்பர் ... ... | 47 | மூதுரை. | 273 |
| கற்றதனாலாயபயன்... ... | 1 | குறள். | 2 |
| கற்றறிவார்கண்ட ... ... | 41 | பழமொழி. | 239 |
| கற்றறிந்தநாவினார் ... ... | 33 | நாலடி. | 194 |
| கற்றனகல்லார்... ... ... | 7 | நீதிநெறி. | 42 |
| கற்றுருக்கும் ... ... | 61 | நாலடி. | 358 |
| கற்றுப்பிறர்க்குரைத்து ... ... | 7 | நீதிநெறி. | 41 |
| கனவினுமின்னாது ... ... | 18 | குறள். | 101 |
| கனைகடற்றண்சேர்ப்ப ... ... | 5 | நாலடி. | 27 |
| காக்கபொருளா... ... | 42 | குறள். | 244 |
| காக்கைகரவா ... ... ... | 74 | குறள். | 437 |
| காதன்மனையாளும் ... ... | 93 | நன்னெறி. | 547 |
| காதலார்சொல்லும் ... ... | 50 | நாலடி. | 293 |
| காய்தல்உவத்தல் ... ... | 48 | அறநெறிச்சாரம். | 285 |
| காலத்தினாற்செய்த ... ... | 21 | குறள். | 117 |
| காலாடுபோழ்தில் ... ... | 57 | நாலடி. | 333 |
| காலாழ்களரின்... ... ... | 92 | குறள். | 544 |
| காலைச்செய்வோம் ... ... | 29 | அறநெறிச்சாரம். | 169 |
| காவாதொருவன்றன் ... ... | 47 | நாலடி. | 277 |
| கானமயிலாடக் ... ... | 3 | மூதுரை. [ல். | 15 |
| கான்றுருயிர்செகுப்ப ... ... | 100 | அதிவீரராமன்பாட | 600 |
| குஞ்சியழகும் ... ... | 4 | நாலடி. | 23 |
| குடநீரட்டுண்ணும் ... ... | 93 | நன்னெறி. | 549 |
| குடம்பைதனித்தொழிய ... | 26 | குறள். | 152 |
| குடிகொன்றிறை ... ... | 88 | நீதிநெறி. | 575 |
| குடிதழீஇக்கோல் ... ... | 89 | குறள். | 521 |
| குணமென்னுங்குன் ... ... | 83 | குறள். | 489 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| குழல்இனிதியாழினி ... ... | 87 | குறள். | 511 |
| குற்றமும்ஏனைக்குண ... | 13 | நாலடி. | 74 |
| கூத்தாட்டவைக்குழாத் ... ... | 26 | குறள். | 147 |
| கூர்த்துநாய்கவ்விக் ... ... | 48 | நாலடி. | 284 |
| கூழுங்குடியும் ... ... ... | 89 | குறள். | 524 |
| கெடுங்காலைக்கை ... ... | 16 | குறள். | 24 |
| கெடுவல்யானென்ப ... ... | 90 | குறள். | 530 |
| கேடில்விழுச்செல்வங் ... | 2 | குறள். | 13 |
| கேடும்பெருக்கமும்... ... ... | 9 | குறள். | 529 |
| கேட்டினுமுண்டோ ... | 1 | குறள். | 61 |
| கேளாதேவந்து ... ... | 28 | நாலடி. | 163 |
| கைப்பொருள்கொடுத்துங் ... | 100 | சீவகசிந்தாமணி. | 594 |
| கைம்மாறுவேண்டா ... ... | 45 | குறள். | 261 |
| கொடுப்பதழுக்கறுப்பான் ... | 67 | குறள். | 393 |
| கொலையஞ்சார் ... ... | 52 | நீதிநெறி. | 304 |
| கொல்லைஇரும்புனத்து. ... | 10 | நாலடி. | 55 |
| கொள்ளுங்கொடுங்கூ ... ... | 28 | நன்னெறி. | 164 |
| கொன்னேகழிந்தன்... ... | 29 | நாலடி. | 167 |
| கோட்டுப்பூப்போல ... ... | 11 | நாலடி. | 62 |
| கோதையருவிக் ... ... | 50 | நாலடி. | 292 |
| கோவாதசொல்லும் ... ... | 41 | பழமொழி. | 240 |
| கோளீற்றிருந்து ... ... | 98 | தேம்பாவணி. | 578 |
| கோளில்பொறியிற் ... ... | 1 | குறள். | 6 |
| சக்கரச்செல்வம் ... ... | 34 | நாலடி. | 195 |
| சாதியிரண்டொழிய ... ... | 81 | நல்வழி. | 474 |
| சாந்தனையுந்தீயனவே ... | 22 | மூதுரை. | 123 |
| சான்றாண்மைசாயல் ... ... | 81 | நாலடி. | 478 |
| சிறப்பீனுஞ்செல்வமும் ... | 40 | குறள். | 231 |
| சிறப்பீனுஞ்செல்வம்பெறினும் ... | 71 | குறள். | 414 |
| சிறைகாக்குங்காப்பு ... | 94 | குறள். | 556 |
| சிறுமுயற்சிசெய்தாங் ... ... | 36 | நீதிநெறி. | 209 |
| சிறுமைபலசெய்து ... ... | 76 | குறள். | 446 |
| சிறியாருணர்ச்சியுள் ... ... | 23 | குறள். | 131 |
| சிற்றின்பம்வெஃகி ... ... | 31 | குறள். | 180 |
| சிற்றினம்அஞ்சும்பெருமை ... | 73 | குறள். | 426 |
| சிற்றின்பஞ்சின்னீர ... | 52 | நீதிநெறி. | 305 |
| சினமென்னுஞ் ... ... | 49 | குறள். | 290 |
| சினத்தைப்பொருள் ... | 49 | குறள். | 291 |
| சீரியர்கெட்டாலுஞ் ... ... | 80 | மூதுரை. | 469 |
| சீரியார்கேண்மை ... ... | 13 | நாலடி. | 75 |
| சீரிடங்காணின் ... ... | 18 | குறள். | 102 |
| சுழன்றுமேர்ப்பின் ... | 97 | குறள். | 560 |
| சுற்றத்தாற்சுற்றப் ... ... | 74 | குறள். | 435 |

| | பாடம். | நூல். | சவி. |
|---|---|---|---|
| செப்பமுடையவனாக்கம் ... | 90 | குறள். | 527 |
| செயற்கடவவல்லனவும் ... | 79 | நீதிநெறி. | 463 |
| செயற்கரிய ... ... | 15 | குறள். | 83 |
| செயற்கரியசெய்வார் ... ... | 83 | குறள். | 487 |
| செம்புஞ்செய்ணையுந் ... | 103 | தாயுமானார். | 609 |
| செய்யாமற்செய்த ... ... | 21 | குறள். | 117 |
| செய்தக்கவல்ல ... ... | 63 | குறள். | 369 |
| செல்லான்கிழவன் ... ... | 97 | குறள். | 573 |
| செல்லாவிடத்தும் ... ... | 82 | நாலடி. | 482 |
| செல்வர்யாமென்று ... ... | 24 | நாலடி. | 139 |
| செல்வத்துட்செல்வஞ் ... | 35 | குறள். | 201 |
| செல்லிடத்துக்காப்பான் ... ... | 49 | குறள். | 286 |
| செறுந்தோறுடைப் ... | 12 | நாலடி. | 68 |
| சென்றேயெறிப ... ... | 28 | நாலடி. | 160 |
| சென்றநாளெல்லாம் ... | 29 | அறநெறிச்சாரம். | 170 |
| சென்றவிடத்தாற் ... ... | 59 | குறள். | 347 |
| சேலுண்டவுண்கண்ணாரிற் ... | 99 | கம்பர்பாடல். | 592 |
| சொல்லுதல்யார்க்கு ... ... | 60 | குறள். | 354 |
| சொல்வணக்கம்ஒன்னார் ... | 18 | குறள். | 105 |
| சொற்கோட்டம்இல் ... ... | 90 | குறள். | 531 |
| ஞாலங்கருதினுங் ... ... | 92 | குறள். | 540 |
| ஞாலத்திருள்நடப்ப ... ... | 101 | அதிவீரராமன்பாடல். | 603 |
| தீங்குறைதீர்வுள்ளார் ... | 22 | நன்னெறி. | 125 |
| தண்ணீர்நிலைநலத்தாற் ... ... | 81 | நல்வழி. | 476 |
| தண்டலைமயில்களாட ... | 99 | கம்பர்பாடல். | 587 |
| தத்தநிலைக்குந் ... ... | 80 | நன்னெறி. | 471 |
| தந்தைமகற்காற்று ... ... | 87 | குறள். | 512 |
| தமரேயுந்தம்மை ... ... | 34 | பழமொழி. | 196 |
| தமரென்றுதாங்கொள்ளப் ... | 13 | நாலடி. | 73 |
| தம்மையுந்தங்க ... ... | 22 | நன்னெறி. | 127 |
| தம்முடையாற்றலு ... ... | 53 | நாலடி. | 310 |
| தம்மையிகழ்ந்தமை ... ... | 29 | நாலடி. | 168 |
| தம்மின்மெலியாரை ... | 33 | நீதிநெறி. | 190 |
| தம்மிற்றம்மக்கள் ... ... | 87 | குறள். | 513 |
| தவமறைந்தல்லவை .. | 70 | குறள். | 410 |
| தற்காத்துத்தற்கொண்டாற் ... | 94 | குறள். | 554 |
| தனக்குவமையில்லாதான் ... | 1 | குறள். | 5 |
| தன்னைநென்றுரை ... ... | 102 | தாயுமானார். | 608 |
| தன்னுயிர்க்கின்னாமை ... | 71 | குறள். | 419 |
| தன்னெஞ்சறிவது ... ... | 58 | குறள். | 338 |
| தன்வினைத்தானெஞ்சக ... | 39 | அறநெறிச்சாரம். | 227 |
| தன்னைத்தான்காக்கிற் ... | 49 | குறள். | 289 |
| தன்னைத்தான்காதலனா ... | 69 | குறள். | 407 |
| தாஞ்செய்வினையல்லாற் ... | 67 | நாலடி. | 337 |
| தாளாண்மையென்னுந் ... | 37 | குறள். | 218 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| தாளாற்றித்தந்த ... ... | 45 | குறள். | 262 |
| தான்கெடினுந்தக்கார் ... ... | 50 | நாலடி. | 297 |
| திறனல்லதற்பிறர் ... ... | 51 | குறள். | 302 |
| தினை அனைத்தே ஆயி ... ... | 20 | நாலடி. | 111 |
| தினைத்துணைநன்றி ... | 21 | குறள். | 119 |
| தீங்கரும்பீன்ற ... ... | 72 | நாலடி. | 420 |
| தீப்பாலதான்பிறர்கட் ... | 69 | குறள். | 404 |
| தீயவைதீயபய ... ... ... | 69 | குறள். | 402 |
| தீயாரைக்காண்பதுவு ... | 8 | மூதுரை. | 46 |
| தீயினாற்சுட்டபுண் ... ... | 42 | குறள். | 248 |
| தீயவைசெய்தார்கெடுத ... | 69 | குறள். | 406 |
| தீயசெயற்செய்வார் ... ... | 79 | நீதிநெறி. | 464 |
| துகளர்பெருஞ்செல்வந் ... | 24 | நாலடி. | 136 |
| துஞ்சினார்செத்தாரின் ... ... | 77 | குறள். | 453 |
| தூய்மையென்பதவா ... | 32 | குறள். | 184 |
| தெண்ணீர்க்குவளை ... ... | 52 | நாலடி. | 306 |
| தெய்வம்உளதென்பார் ... | 96 | நீதிநெறி. | 566 |
| தெளிவிலார்நட்பி ... ... | 11 | நாலடி. | 65 |
| தேறுந்தலையின்முனிவோய் ... | 98 | தேம்பாவணி. | 581 |
| தொடங்குங்காற்றுன்பமாய் ... | 4 | நீதிநெறி. | 19 |
| தொட்டனைத்தூறுமணற் ... | 2 | குறள். | 11 |
| தொழுததங்கையினுள்ளும் ... | 100 | சிவகசிந்தாமணி. | 596 |
| தோணிஇயக்குவான் ... | 5 | நாலடி. | 26 |
| நகுதற்பொருட்டன்று ... ... | 15 | குறள். | 85 |
| நகையும்உவகையும் ... ... | 49 | குறள். | 288 |
| நகைவகையராகிய ... ... | 17 | குறள். | 99 |
| நஞ்சுடைமைதானறிந்து ... | 79 | மூதுரை. | 462 |
| நடுவின்றிநன்பொருள் ... ... | 31 | குறள். | 178 |
| நடுஉளருள்வேதிகை... ... | 43 | நாலடி. | 253 |
| நட்டார்க்குநல்லா ... ... | 44 | நாலடி. | 257 |
| நட்பிற்குவீற்றிருக்கை ... | 15 | குறள். | 88 |
| நயனிலசொல்லினுஞ் ... ... | 66 | குறள். | 387 |
| நரைவருமென்றெண்ணி ... | 25 | நாலடி. | 142 |
| நல்லாறெனினும் ... ... | 46 | குறள். | 270 |
| நல்லாரெனத்தா ... ... | 12 | நாலடி. | 67 |
| நல்லொழுக்கின் ... ... | 36 | நீதிநெறி. | 208 |
| நல்லார்கட்பட்ட ... ... | 6 | குறள். | 34 |
| நல்லினத்தினூங்குந் ... ... | 73 | குறள். | 431 |
| நல்லார்ஒருவருக்கு ... ... | 19 | மூதுரை. | 107 |
| நல்லாரைக்காண்பதுவு ... ... | 8 | மூதுரை. | 45 |
| நல்லாவின்கன்றாயின் ... | 57 | நாலடி. | 334 |
| நல்லோர் [illegible] ... ... | 9 | நன்னெறி. | 51 |
| நளிகடற்றண்சேர்ப்ப ... | 41 | நாலடி. | 233 |
| நற்றாமரைக்கயத்தி ... ... | 9 | மூதுரை. | 50 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| நற்குமரைக்கயத்தி ... ... | 3 | மூதுரை. | 16 |
| நன்றிமறப்பது ... ... | 21 | குறள். | 123 |
| நன்றொருவற்குச் ... ... | 19 | மூதுரை. | 106 |
| நன்றிக்குவித்தாகு ... ... | 54 | குறள். | 319 |
| நன்கொன்றறிபவர் ... ... | 20 | பழமொழி. | 114 |
| நன்றாற்றலுள்ளுந் ... .. | 63 | குறள். | 371 |
| நன்றென்றவற்றுள் ... ... | 35 | குறள். | 205 |
| நன்னெறிநினூடு ... ... | 90 | குறள். | 528 |
| நாச்செற்றுவிக்குள் ... | 26 | குறள். | 149 |
| நாடாதநட்டலிற் ... ... | 16 | குறள். | 89 |
| நாடிநமரென்று ... ... | 20 | பழமொழி. | 115 |
| நாடொறுநாடி ... ... | 89 | குறள். | 523 |
| நாணாமைநாடாமை ... ... | 65 | குறள். | 381 |
| நாணென்னுநல்லாள் ... ... | 77 | குறள். | 452 |
| நாவொன்றைஒன்றுபோற் ... | 26 | குறள். | 148 |
| நிலத்தியல்பானீர் ... ... | 73 | குறள். | 427 |
| நிலநலத்தானந்திய ... | 10 | நாலடி. | 56 |
| நிலையிற்றிரியா ... ... | 42 | குறள். | 245 |
| நில்லாதவற்றைநிலை ... | 29 | குறள். | 146 |
| நிறைநீரநீரவர் ... ... | 15 | குறள். | 84 |
| நிறைமொழிமாந்தர் ... | 83 | குறள். | 488 |
| நினையறப்பெறு ... ... | 39 | அறநெறி. | 228 |
| நின்றனநின்றன ... ... | 24 | நாலடி. | 136 |
| நீரிடையுறங்குமேதி ... ... | 99 | கம்பர்பாடல். | 588 |
| நீர்பாயுலவிற்குயிரோய் ... | 98 | தேம்பாவணி. | 580 |
| நுணங்கியகேள்வியர் ... ... | 35 | குறள். | 204 |
| நுண்மாணுழைபுல ... | 6 | குறள். | 33 |
| நுண்ணுணர்வினரொடு ... ... | 14 | நாலடி. | 76 |
| நுனிக்கொம்பரேறினார் ... | 64 | குறள். | 376 |
| நூல்வாய்ப்புசும்மேல் ... .. | 97 | தேம்பாவணி. | 579 |
| நெருஞ்சமெனிவேன் ... ... | 101 | அதிவீரராமன் பாடல். | 602 |
| நெஞ்சிற்றுறவார் ... ... | 70 | குறள். | 411 |
| நெடுங்காலமோடினு ... | 48 | நாலடி. | 282 |
| நெடும்புனலுள்வெல்லும் ... | 92 | குறள். | 542 |
| நெருநலுளனொருவன் ... | 26 | குறள். | 150 |
| நெல்லுக்கிறைத்தநீர் ... ... | 8 | மூதுரை. | 47 |
| நேரலார்போரேறே ... | 101 | அதிவீரராமன்பாடல். | 601 |
| நேர்த்துதிகரல்லார்... ... ... | 47 | நாலடி. | 278 |
| பகர்ச்சிமடவார் ... ... | 9 | நன்னெறி. | 52 |
| பகல்வெல்லுங்கூகையை ... | 91 | குறள். | 537 |
| பகையின்றுபல்லவர் ... | 55 | நீதிநெறி. | 321 |
| படுபயன்வெஃகி ... ... | 31 | குறள். | 179 |
| படையுழவெழுந்த ... ... | 99 | கம்பர்பாடல். | 589 |
| பட்டவையாற்... ... ... | 29 | அறநெறிச்சாரம். | 171 |
| பணியுமாம் .. ... | 23 | குறள். | 133 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| பண்டமறியார் ... ... ... | 52 | நாலடி. | 308 |
| பண்பெறுமனைப்ப ... ... | 91 | மூதுரை. | 535 |
| பண்ணென்னாம்பாடற் ... ... | 86 | குறள். | 504 |
| பயனில்சொற் ... ... | 66 | குறள். | 386 |
| பயன்றூக்கார்செய்த ... ... | 21 | குறள். | 118 |
| பயன்மரமுள்ளூர் ... ... | 45 | குறள். | 265 |
| பாபரப்பிறேனும் ... ... | 96 | நீதிநெறி. | 563 |
| பரிந்தோம்பிக்காக்க ... | 54 | குறள். | 317 |
| பருகுவார்போலினும் ... ... | 17 | குறள். | 96 |
| பருவத்தோடொட்ட ... | 91 | குறள். | 538 |
| பருவமெனைத்துள ... ... | 25 | நாலடி. | 143 |
| பலகற்றோமியாமென்று ... | 34 | அறநெறிச்சாரம். | 197 |
| பலகுடைநீழலுந் ... ... | 97 | குறள். | 573 |
| பலநல்லகற்றக் ... ... | 18 | குறள். | 104 |
| பலநாளும்பக்கத்தார் ... ... | 11 | நாலடி. | 61 |
| பல்லார்முனியப் ... ... | 66 | குறள். | 385 |
| பழகியசெல்வமும் ... ... | 76 | குறள். | 447 |
| பற்றற்றகண்ணும் ... ... | 74 | குறள். | 432 |
| பன்றிக்கூழ்ப்பத்தரிற் ... ... | 61 | நாலடி. | 355 |
| பாடுபட்டுத்தேடி ... ... | 30 | நல்வழி. | 174 |
| பாலாற்கழீஇ ... ... | 61 | நாலடி. | 356 |
| பிழைத்துணர்ந்தும்... ... | 35 | குறள். | 203 |
| பிறப்பொக்கும் ... ... | 23 | குறள். | 128 |
| பிறர்க்குதவிசெய்யார் ... | 19 | நன்னெறி. | 109 |
| பிறராற்பெருஞ்சுட்டு ... ... | 33 | நீதிநெறி. | 192 |
| பிறன்பழிகூறுவான் ... ... | 56 | குறள். | 330 |
| பீலிபெய்சாகாடும் ... ... | 64 | குறள். | 375 |
| புகழ்புரிந்தில்லிலோர்க் ... ... | 94 | குறள். | 555 |
| புக்கில்அமைந்தின்று ... | 26 | குறள். | 153 |
| புணரிகடல்சூழ்வையத்து ... | 62 | நாலடி. | 364 |
| புல்லாப்புன்கோட்டி ... | 33 | நாலடி. | 193 |
| புறங்கூறிப்பொய்த் ... ... | 56 | குறள். | 327 |
| புறந்தூய்மைநீரான் ... | 58 | குறள். | 341 |
| புன்சொல்லுநன்சொல் ... ... | 95 | பழமொழி. | 560 |
| புன்னுனிமேனீர்போல் ... | 28 | நாலடி. | 162 |
| பூவாதேகாய்க்குமரமு ... ... | 7 | நல்வழி. | 40 |
| பெயர்ப்பான்மழை ... | 43 | நாலடி. | 254 |
| பெரியவர்தந்நோய் ... ... | 43 | நன்னெறி. | 250 |
| பெருகுவதுபோலத்... ... | 14 | நாலடி. | 77 |
| பெருங்கொடையான் ... ... | 74 | குறள். | 436 |
| பெருமுத்தரையர் .... ... | 72 | நாலடி. | 421 |
| பெருமையுடையர் ... ... | 23 | குறள். | 130 |
| பெருமைபெருமிதம் ... | 23 | குறள். | 133 |
| பெறுவதொன்றின்றியும்... ... | 7 | நாலடி. | 38 |
| பெற்றசிறுக ... ... | 30 | நீதிநெறி | 176 |

| | பாடம். | நூல். | கவி |
|---|---|---|---|
| பேதைமையென்னும்வித் ... | 100 | சீவகசிந்தாமணி. | 595 |
| பேதைமையென்பதொன் ... | 65 | குறள். | 379 |
| பேதைமையுளெல்லாம் ... | 65 | குறள். | 380 |
| பேரறிஞர்தா ... ... ... | 19 | நன்னெறி. | 110 |
| பொச்சாப்புக்கொல்லும் ... | 78 | குறள். | 457 |
| பொருளுணர்ந்தபொச் ... ... | 66 | குறள். | 389 |
| பொருள்கெடுத்து ... ... | 76 | குறள். | 449 |
| பொல்லாதசொல்லி ... ... | 55 | பழமொழி. | 324 |
| பொழிந்தினிதுநாறினு ... | 61 | நாலடி. | 357 |
| பொறியின்மையார்க்கும் ... ... | 38 | குறள். | 222 |
| பொறுத்தல்இறப்பினை ... | 51 | குறள். | 299 |
| பொன்னணியும்வேந்த ... ... | 34 | நன்னெறி. | 200 |
| பொன்னிறச்செந்நெல் ... | 62 | நாலடி. | 365 |
| பொன்னினுருகும்பொரு ... | 100 | சீவகசிந்தாமணி. | 599 |
| பொன்னைமாதரை ... ... | 102 | தாயுமானார். | 607 |
| மக்கண்மெய்தீண்டல் ... ... | 87 | குறள். | 510 |
| மடல்பெரிதுதாழை ... ... | 91 | மூதுரை. | 533 |
| மடிதிரைதந்திட்ட ... ... | 12 | நாலடி. | 70 |
| மண்ணோடியைந்தமரத் ... | 86 | குறள். | 507 |
| மதித்திறப்பாரும் ... ... | 47 | நாலடி. | 276 |
| மரீஇப்பலரொடு ... ... | 12 | நாலடி. | 66 |
| மருந்தாகித்தப்பா ... ... | 45 | குறள். | 266 |
| மருவுகமாசற்றார் ... ... | 17 | குறள். | 95 |
| மருவியகாதன்மனை ... ... | 93 | அறநெறிச்சாரம். | 550 |
| மலர்மிசையேகி ... ... | 1 | குறள். | 3 |
| மலைநலமுள்ளுங் ... ... | 20 | நாலடி. | 112 |
| மலைமிசைத்தோன்று ... | 27 | நாலடி. | 157 |
| மல்குதிரைய ... ... .. | 62 | நாலடி. | 363 |
| மழித்தலுநீட்டலும் ... ... | 70 | குறள். | 413 |
| மறத்தல்வெகுளியை ... ... | 49 | குறள். | 287 |
| மறந்தும்பிறன்கேடு ... ... | 69 | குறள். | 403 |
| மறவற்கமாசற்றார் ... ... | 21 | குறள். | 121 |
| மறுமையும்இம்மையும் ... | 43 | நாலடி. | 252 |
| மறுமனத்தான் ... ... ... | 34 | பழமொழி. | 198 |
| மறைவழிப்பட்ட ... ... | 96 | நீதிநெறி. | 567 |
| மற்றறிவாநல்வினை ... ... | 25 | நாலடி. | 144 |
| மனத்ததுமாசாக ... ... | 70 | குறள். | 412 |
| மனத்தகறுப்பெனின் ... ... | 39 | நீதிநெறி. | 225 |
| மனத்தான்மறுவில்லர் ... | 10 | நாலடி. | 57 |
| மனத்துக்கண்மாசில ... ... | 40 | குறள். | 234 |
| மனத்தொடுவாய்மை ... | 58 | குறள். | 340 |
| மனத்தானுமாந்தர்க் ... ... | 73 | குறள். | 428 |
| மனந்தூய்மைசெய்வினை ... | 73 | குறள். | 429 |
| மனநலமன்னுயிர்க் ... ... | 73 | குறள். | 430 |
| மனைமாட்சியில்லாள் ... | 94 | குறள். | 552 |
| மனைத்தக்கமாண்பு ... ... | 94 | குறள். | 551 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| மன்றங்கறங்க ... ... | 27 | நாலடி. | 159 |
| மன்னுயிரோம்பி ... ... | 85 | குறள். | 499 |
| மன்னர்க்குமன்னுதல் ... | 89 | குறள். | 525 |
| மன்னனுமாசறக் ... ... | 3 | மூதுரை. | 17 |
| மன்னவனேஇப்பிறப்பில் ... | 101 | அதிவீரராமன்பாடல். | 604 |
| மாக்கேழ்மடநல்லாய் ... ... | 29 | நாலடி. | 166 |
| மாய்வதன்முன்னே ... ... | 30 | பழமொழி. | 173 |
| மாற்றாராய்நின்று ... ... | 48 | நாலடி. | 281 |
| மானஅருங்கலநீக்கி ... ... | 53 | நாலடி. | 315 |
| மிகுதியான்மிக்கவை ... ... | 51 | குறள். | 305 |
| மிக்குப்பெருகி ... ... | 61 | பழமொழி. | 360 |
| முகநகநட்பதுநட்பன் ... ... | 15 | குறள். | 86 |
| முடிப்பமுடித்தப்பின் ... | 88 | நீதிநெறி. | 517 |
| முட்டற்றபோழ்து ... ... | 14 | நாலடி. | 80 |
| முயற்சிதிருவினை ... ... | 38 | குறள். | 220 |
| முல்லைமுகைமுறுவல் ... ... | 52 | நாலடி. | 307 |
| முறைதெரிந்து ... ... | 88 | பழமொழி. | 520 |
| முற்றற்சிறுமந்தி ... ... | 14 | நாலடி. | 79 |
| முற்றுமுணர்ந்தவர் ... | 33 | நீதிநெறி. | 189 |
| முனிவினுநல்குவர் ... ... | 47 | மூதுரை. | 275 |
| முன்னுறக்காவா ... ... | 78 | குறள். | 459 |
| முன்னரேசாநாள் ... ... | 43 | நாலடி. | 251 |
| மெய்வகைதெரிதல்... ... | 100 | சிவகசிந்தாமணி. | 593 |
| மெய்யுணர்ந்தார் ... ... | 39 | நீதிநெறி. | 226 |
| மேலிருந்துமேலல்... ... | 23 | குறள். | 129 |
| மேற்பிறந்தாராயினும் ... ... | 6 | குறள். | 35 |
| மோப்பக்குழையும்அனிச்சம் ... | 68 | குறள். | 401 |
| யாகாவாராயினு ... ... | 42 | குறள். | 247 |
| யாதானுநாடாமால் ... | 2 | குறள். | 12 |
| யாமெய்யாக்கண்டவற்றுள் ... | 58 | குறள். | 343 |
| யானையனையவர் ... ... | 11 | நாலடி. | 60 |
| வஞ்சித்தொழுகுமதி ... ... | 79 | நீதிநெறி. | 465 |
| வயாவும் வருத்தமும் ... | 72 | நாலடி. | 423 |
| வரம்பெலாமுத்தம்... ... | 99 | கம்பர்பாடியது. | 585 |
| வருந்திஅழைத்தாலும் ... ... | 96 | நல்வழி. | 564 |
| வருந்தித்தாங்கற்றன ... | 4 | நீதிநெறி. | 21 |
| வருவிருந்துவைகலும் ... ... | 68 | குறள். | 399 |
| வலியினிலைமையான் ... | 70 | குறள். | 409 |
| வலியார்முற்றன்னை ... ... | 85 | குறள். | 502 |
| வள்ளன்மைஇல்லாதான் ... | 30 | நீதிநெறி. | 177 |
| வறியார்க்கொன்றீவதே ... ... | 46 | குறள். | 269 |
| வாக்கரும்பாதநான்கும் ... | 99 | கம்பர்பாடியது. | 584 |
| வாணிகஞ்செய்வார்க்கு ... ... | 90 | குறள். | 532 |
| வாவும்இளமான்காண் ... | 101 | அதிவீரராமன்பாட்டு. | 605 |

| | பாடம். | நூல். | கவி. |
|---|---|---|---|
| வாழ்நாட்கலகாய் ... ... | 27 | நாலடி. | 158 |
| வாள்போற்பகைவரை ... | 79 | குறள். | 466 |
| வானுயர்தோற்றம் ... ... | 70 | குறள். | 408 |
| வானேறு நயங்கள் ... ... | 98 | தேம்பாவணி. | 577 |
| வியவற்கவெஞ்ஞான்றும் ... | 35 | குறள். | 296 |
| விருந்துபுறத்ததான் ... ... | 68 | அறநெறிச்சாரம். | 397 |
| விருப்பறாச்சுற்றம் ... ... | 74 | குறள். | 433 |
| விலக்கியவோம்பி ... ... | 33 | நீதிநெறி. | 191 |
| விலங்கொடுமக்கள் ... ... | 6 | குறள். | 36 |
| வினைவலியுந்தன்வலி ... | 64 | குறள். | 373 |
| வெட்டெனவுமெத் ... ... | 95 | நல்வழி. | 558 |
| வெண்டளக்கலவைச் ... | 99 | கம்பர்பாடல். | 591 |
| வெள்ளத்தனையமலர் ... ... | 37 | குறள். | 215 |
| வெள்ளத்தனையவிடும்பை... ... | 38 | குறள். | 221 |
| வெறியயர்வெங்களத்து ... ... | 25 | நாலடி. | 142 |
| வென்றியாக்கலும் ... ... | 100 | சீவகசிந்தாமணி. | 598 |
| வேங்கைவரிப்புலிக்கு ... ... | 19 | மூதுரை. | 108 |
| வேண்டற்கவென்றிடினும் ... | 76 | குறள். | 444 |
| வேண்டுதல்வேண்டாமை ... | 1 | குறள். | 4 |
| வேண்டற்கவெஃகியாம் ... | 31 | குறள். | 183 |
| வேற்றுமையின்றி ... ... | 50 | நாலடி. | 294 |
| வைகலும்வைகல் ... ... | 53 | நாலடி. | 314 |

---

செய்யுள் அகராதி

முற்றும்.

# ERRATA.

| பிழை. | திருத்தம். | பக்கம். | பாடம். | வரி. |
| --- | --- | --- | --- | --- |
| இம்முனே | இம்முனே | 1 | வசனம். | 1 |
| நாலடி | நீதிநெறி | 11 | ... | 9 |
| நீதிநெறி | நாலடி | 11 | ... | 17 |
| நூற்பெயரில்லாமை | நாலடி | 14 | ... | 9 |
| நூற்பெயரில்லாமை | பழமொழி | 27 | ... | 2 |
| உண்டுண்டுண்டு | தொண்தொண்தொடு | 36 | 161 | 26 |
| கழிந்ததிளேமை | கழித்தன்றிளேமை | 38 | 167 | 9 |
| நூற்பெயரில்லாமை | அறநெறிச்சாரம் | 38 | ... | 19 |
| நூற்பெயரில்லாமை | நாலடி | 43 | ... | 7 |
| நூற்பெயரில்லாமை | அறநெறிச்சாரம் | 49 | ... | 16 |
| பொன்னிறைச் | பொன்னிறச் | 75 | 365 | 15 |
| உணர்ந்துந் | உணர்ந்தும் | 78 | 382 | 2 |
| காட்டி உணர்க | கூட்டிஉணர்க | 91 | 470 | 20 |
| அன்பிறகும் | அன்பிற்கும் | 95 | 491 | 17 |
| புகழந்த | புகழ்ந்த | 112 | 584 | 12 |

# TAMIL POETICAL ANTHOLOGY.

# தமிழ்ச் செய்யுட் கலம்பகம்.

[கெடுதல் விகாரம் வந்த சொல்லுக்கு எல்லாம் (') இக்குறியைக்குறிப்பு மேலே போட்டிருப்பது காண்க.—ஒவ்வொரு பாட்டின் அடியிலே துரைத்தனத்தார் ஸ்தாபித்த கல்விச்சாலைகளில் வழங்கிவருகிற தமிழ் இலக்கண வினாவிடையை மாணாக்கர் ஒத்துப் பார்க்கிறதற்கு உதவியாக அந்தந்தக் காரியங்களைப் பற்றின குறிப்புகள் சேர்க்கப்பட்டன.]

## I. பாடம்.

### கடவுள் வணக்கம். (திருவள்ளுவர் குறள்.)

[கடவுளின் இருப்பு.]

1. அகர முதல எழுத் தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

[எழுவாய்: எழுத்தெல்லாம். உலகு. (இ. வி. 128.) பயனிலை: முதல, முதற்று, (இ. வி. 129.) ஏ எ-து தேற்றேகாரம் (இ. வி. 111.) முதல, முதற்று என்பன குறிப்பு வினைகள். (இ. வி. 93.) இது குறள் வெண்பா. (இ. வி. 187.)]

[அறிவின் பயன்.]

2. கற்றதனால் ஆய பயனென்கொல், வால் அறிவன்
நற்றாள் டொழாஅர் எனின்?

[கற்றதனால் எ-து பகுபதம். கல் எ-து பகுதி. ற் எ-து இடைநிலை. து எ-து விகுதி. அன் எ-து சாரியை. ஆல் எ-து வேற்றுமையின் உருபு. (இ. வி. 95. 123.) ஆய = உண்டாகிய. இடைக்குறை. (இ. வி. 41. 87.) எனின (இ. வி. 86.) கொல் எ-து அசைநிலை. (இ. வி. 16.) அறிவன் (இ. வி. 93.) நற்றாள் (இ. வி. 38.) தாடொழாஅர் (இ. வி. 37. 14.)]

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

[எழுவாய்: சேர்ந்தார். பயனிலை: வாழ்வார். மலர் = போதும் நெஞ்ச மலர் எ-து உவமை ஆகு பெயர் (இ. வி. 162.) ஏகினான் எ-து விரைவு பற்றி நிகழ்காலமயங்கிவந்த போன காலம். (இ. வி. 147.) ஏகினான் ஏகினவனுடைய. (இ. வி. 152. 95.) சேர்ந்தார் (இ. வி. 95.) (மிசை இ. வி. 63.) அடி. (இ. வி. 152.) நீடு எ-து வினையுரிச்சொல். (இ. வி. 120.)]

---

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

[எழுவாய்: இடும்பை. பயனிலை: இல. சேர்ந்தார்க்கியாண்டும். (இ. வி. 24.) வேண்டுதல் வேண்டாமை (இ. வி. 156. 94.) இலான் = இல்லாதவனுடைய. தொகுத்தல் விகாரம். (இ. வி. 41. 125.)]

---

[மனக்கவலை நீங்கும் வகை.]

5. தனக்குவமை இல்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

[எழுவாய்: மாற்றல். பயனிலை: அரிது. தனக்குவமை (இ. வி. 74. 108. 27. 24.) அரிது. இல்லாதான். (இ. வி. 91. 95. 152.) இல்லாதான் றாள் (இ. வி. 38.) அல்லால். (இ. வி. 36.) அரிது எ-து இல்லை என்னும் பொருளில் வந்தது.]

---

[கடவுளை வணங்காதவர்.]

6. கோளில் பொறியிற் குணம் இலவே, எண் குணத்தான்
றாளை வணங்காத் தலை.

[எழுவாய்: தலை. பயனிலை: இல. கோளில் = கோள் இல்லாத (இ. வி. 153.) பொறியின் = பொறியைப் போல. (இ. வி. 61.) எண் (இ. வி. 159.) குணத்தான் எ-து பெயர்ப்பகுபதம் (இ. வி. 123.) வணங்கா = வணங்காத. (இ. வி. 91.)]

---

## II. பாடம்.

---

### கல்வி. (தி.குறள்.)

---

7. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

[எழுவாய்: ஒருவன். பயனிலை: கற்க, நிற்க. (இ. வி. 85.) அற. (இ. வி. 140.) கற்பவை. (இ. வி. 95.) அதற்கு, (இ. வி. 71. 35.) தக. (இ. வி. 120.)]

---

8. எண்ணென்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும்,
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

[எழுவாய்: அறிந்தோர். பயனிலை: என்ப. (இ. வி. 83.) இவ்விரண்டும். (இ. வி. 152. 113.) கணிதநூல்களும் இலக்கணநூல்களும் மனிதர்களுக்குக் கண்கள் ஆகும்.]

---

9. கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

[எழுவாய்: கற்றோர், கல்லாதவர். பயனிலை: கண்ணுடையர், புண்ணுடையர். என்பவர் என்றுசொல்லப்படுவோர் முகத்து, (இ. வி. 66. 152.) முகத்தினிடத்தில்.]

---

[கற்றோருடைய உயர்வு.]

10. உவப்பத் தலைக்கூடி, உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

[எழுவாய்: தொழில். பயனிலை: அனைத்து. உவப்ப = மகிழும்படி. (இ. வி. 86. 140.) உள்ள = நினைக்கும்படி. அனைத்து = அத்தன்மையுடையதாம். (இ. வி. 93.]

---

11. தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

[எழுவாய்: கேணி, அறிவு. பயனிலை: ஊறும். தொட்டனைத்து = தோண்டிய அளவினதாக. அது போல் தொ இ. வி. 155. கற்றனைத்து = கற்ற அளவினதாக.—தொட்ட அனைத்து, கற்ற அனைத்து என்பவை செய்யுள் விகாரத்தினால் தொட்டனைத்து, கற்றனைத்து என வந்தன. (இ. வி. 41.)]

---

12. யாதானும் நாடாமால், ஊராமால், என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு?

[யாதானும் = யாதாயினும். ஆல், அசைநிலை. (இ. வி. 116.) எழுவாய் = ஆறு. பயநிலை: என். சாம் சாகும். (இ. வி. 87.)]

---

13. கேடில் விழுச்செல்வம் கல்வி; ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

[எழுவாய்: கல்வி. மற்றையவை. பயனிலை: செல்வம், அல்ல; கேடில் = கேடில்லாத. (இ. வி. 153.)]

---

## III. பாடம்.

### கல்வி. (மூதுரை.)

[படியாதவர் ஓரறிவுயிரினும் கடையர்.]

---

14. கவை ஆகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவை எல்லாம் அல்ல மரங்கள்; சவை நடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனே மரம்.

---

[காட்டகத்தே. (இ. வி. 63. 68.) நீட்டோலை. (இ. வி. 153.) நின்றான் நின்று. வாசியா = வாசியாமல். (இ. வி. 90.) மாட்டாதவன் (இ. வி. 1[illegible].)]

---

15. கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அது வாகப் பாவித்துத் தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடுதற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

[எழுவாய்: கவி. பயநிலை: போலுமே. இருந்த (இ. வி. 121.) தானும் (இ. வி. 116.)]

[கற்ரேரும் மூடரும் ஒருவரை ஒருவர் விரும்பார்.]

16. நற்ருமரைக் கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர்; கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை உகக்கும் பிணம்.

[நற்ருமரை = நல் + தாமரை (இ. வி. 38.) கயத்தினல் = கயத்தில் + நல். (இ. வி. 39. 66. 24.) பிணம் = பிணத்தை. (இ. வி. 152.)]

17. மன்னனு மாசறக் கற்ரேனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ரேன் சிறப்புடையன்; மன்னனுக்குத்
தன்றேசம் அல்லாற் சிறப்பில்லை, கற்ரேற்குச்
சென்றவிடம் எல்லாஞ் சிறப்பு.

[கற்ரேன் (இ. வி. 95.) அல்லால் = அல்லாமல். இடைக்குறை. (இ. வி. 41) 12 பாட்டையுங்காண்க. மன்னனும். கற்ரேனும். (இ. வி. 152. 113.)]

18. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்;
அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்; மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

[ஈன்ற (இ. வி. 82. (5.)]

## IV. பாடம்.

### கல்வி. (நீதிநெறிவிளக்கம்.)

19. தொடங்குங் காற்றுன்பம் ஆய், இன்பம் பயக்கும்,
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி; நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர இன்பத்தின், முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

[எழுவாய்: கல்வி; பீழை. பயநிலை: பயக்கும்; அகற்றும்; பெரிது. அகற்றும் = அகல்விக்கும் (இ. வி. 103.) முற்றிழாய், எ-து மகளே முற்றிழை = தொழில் முற்றிய ஆபரணத்தையுடைய பெண்ணே. (இ. வி. 93. 64.) சின்னீர = சின்ன நீரையுடைய. நீர் எ-து தன்மை. (இ. வி. 93.)]

20. எத்துணைய வாயினும் கல்வி இடம்அறிந்
துய்த்துணர் வில்லெனின் இல்லாகும்; உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னாம்? அஃதுண்டேற்
பொன்மலர் நாற்றம் உடைத்து.

[உய்த்துணர்வு = உய்த்துணரும் உணர்வு. இல்லா = இல் + ஆ. (இ. வி. 93.) உய்த்துணர்ந்தும். (இ. வி. 141.) பொன்மலர் = பொன்னால் ஆய மலர். (இ. வி. 152.)]

---

21. வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்து சில கற்பான் தொடங்கல், கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட்டரிப்பரித்தாய்
செய்தப் பொருள்செய் திடல்.

[கற்றன. (இ. வி. 95. 152.) கற்பான் எ-று வினையெச்சம். (இ. வி. 86.) கருந்தனம். (இ. வி. 121.) கருந்தனங்கைத்தலத்த = கையிடத்திலிருக்கிற கருந்தனத்தை. ஆங்கு, அசைச்சொல். செய்திடல். (இ. வி. 124.) (5.)]

---

22. கற்பன ஊழ் அற்றார் கல்விக் கழகத்தார்
சொற்பயிலு மவைதவாய் அங்காத்தல், மற்றுத்தம்
வல்லுரு வஞ்சலின் எம்பியே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

[கற்பன ஊழ் = நூல்களைக் கற்கும் நல்வினை. கழகத்து, (இ. வி. 152. 96.) "மிருகங்கள் பறவைகள் புல்லினுலாகிய உருவத்தினைப் பயப்படுவ போலத் தமது வலிய உருவத்தினைக் கண்டு நீங்கள் பயப்படாதிருங்கள் என்று சொல்லுவதுபோலும்." அஞ்சலின். (இ. வி. 92.) எழுவாய்: அங்காத்தல், பயனிலை: எம்பியே.]

---

(நாலடி.)

---

23. குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,
மஞ்சள் அழகும் அழகல்ல; நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்,
கல்வி அழகே அழகு.

[கோட்டழகு = கோட்டின் அழகு. நெஞ்சத்து, (இ. வி. 152.) நல்லம். (இ. வி. 93.)]

---

## V. பாடம்.

### கற்றோர். (நாலடி நானூறு.)

24. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

[உப்பினை. (இ. வி. 65.) விளை. (இ. வி. 153.) விழுமிதா = விழுமியதாக. (இ. வி. 93.) வைக்கப்படும் = வைக்கப்படுவார். (இ. வி. 137.)]

25. கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே, நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

[நினைக்கில். (இ. வி. 86.) தெள்ளிதின். (இ. வி. 65. 152.) கற்பவே (இ. வி. 85.) உண். (இ. வி. 153.) குருகின். (இ. வி. 61.) = அன்னம்போல.]

26. தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார் காணாய்,
அவன்றுணையா ஆறு போயற்றே நூல்கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

[எழுவாய்: ஒருவன். (தோன்றா.) பயனிலை: கொளல். (இ. வி. 85.) தோணி = தோணியை. அவன் = அவனையே. ஆறு = ஆற்றை. (இ. வி. 152.) போயற்று = போய் அற்று. இதில் போய் = போனால். (இ. வி. 137.) நல்ல கொளல் = நல்லவை கற்றுக்கொள்ளக்கடவாய். தொல்லை. நினை. (இ. வி. 38.)]

27. கனைகடற் றண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே; நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

[எழுவாய்: கேண்மை. தொடர்பு. பயனிலை: தின்றற்று. தகைத்து. கனைகடற்றண் சேர்ப்ப (இ. வி. 153. 152. 50. 64.) தின்றன்ன தின்றற்றோ தின்றாற்போலும். (இ. வி. 137.) அரோ. அசைநிலை.]

28. கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் ; தொல் சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான் பயந்தாங்கு.

[எழுவாய்: ஒருவர். பயநிலை; தலைப்படுவர். ஆயினும். (இ. வி. 141.) படுவர். (இ. வி. 124.) ஒண்ணிறப் பாதிரிப்பூ = ஒள்ளிய நிறத்தை யுடைய பாதிரி மரத்தினது பூவை. (இ. வி. 152. &c.) புத்தோடு = புதிய ஓடு. (இ. வி. 121.) பயந்தாங்கு = பயன்பட்டாற்போலும். (இ. வி. 137.) நாளும். (இ. வி. 113.)]

---

29. அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லா
துலகநூல் ஓதுவ தெல்லாங் கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவார் இல்.

[எழுவாய்: அறிவார். பயநிலை: இல். அலகு சால் = எண் அமைந்த நூல்களை (இ. வி. 157.) கற்பின். (இ. வி. 86.) கூஉம், போஒம் = கூவும். போகும். (இ. வி. 14. 87.)]

---

# VI. பாடம்.

---

## கல்லாமை. (தி. குறள்.)

---

30. அரங்கின்றி வட்டாடி யற்றே,
நிரம்பிய நூலின்றிக் கோட்டி கொளல்.

[எழுவாய்: கொளல். பயநிலை: ஆடியற்றே. (இ. வி. 137.) இன்றி = இல்லாமல், குறிப்பு வினை எச்சம். (இ. வி. 93.) கொளல். (இ. வி. 94. 41. (6.)]

---

31. கல்லா தவரும் நனிநல்லர், கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

[எழுவாய்: கல்லாதவர். பயனிலை. நல்லர். உம். (இ. வி. 113.) நனி (இ. வி. 120.) பெறின். (இ. வி. 86.)]

---

32. உளரென்னும் மாத்திரையர் அல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

[எழுவாய்: கல்லாதவர். பயனிலை: அனையர். என்னும். (இ. வி. 87. (3.) 114.) பயவா. (இ. வி. 91.)]

---

33. நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை அற்று.

[நுண்மாண் நுழை புலம் = நுட்பமாகிய மாட்சிமைப்பட்ட பலநூல்களினுஞ் சென்ற அறிவு. (இ. வி. 153. 154.) எழில்நலம். (இ. வி. 39. 156.)]

---

34. நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

[எழுவாய்: திரு. பயனிலை: இன்னாதே. நல்லார்கண். (இ. வி. 63. 34.) வறுமையின் = வறுமையினும். (இ. வி. 61. ஒப்பு.)]

---

35. மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு.

[எழுவாய்: கல்லாதார். பயனிலை: இலர். கற்றார் அனைத்திலர் பாடு = கற்றவருடைய பெருமை அளவினதாகிய பெருமையை இல்லாதவர்கள் ஆவார்கள்.]

36. விலங்கொடு மக்கள் அனையர், இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

[எழுவாய்: ஏனையவர். பயனிலை: அனையர். இலங்குநூல் = விளங்கிய நூலை. (இ. வி. 153. 152.)]

---

## VI. பாடம்.

---

### புல்லறிவாண்மை. (நாலடி.)

---

37. அருளின் அறமுரைக்கும் அன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர்; பொருளல்லா
ஏழை அதனை இகழ்ந் துரைக்கும்: பாற்கூழை
மூழை சுவை உணரா தாங்கு.

[எழுவாய்: புலவர்; ஏழை. பயனிலை: கொள்வர். உரைக்கும். (இ. வி. 19.) உணராதாங்கு = அறியாததுபோலும்.]

---

38. பெறுவதொன் றின்றியும் பெற்றனை போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டேங் கறுவினாற்
கோத்தின்னா கூறி உரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

[எழுவாய்: சுனைத்து. பயனிலை: தின்னும். இன்றியும். (இ. வி. 141.) மாட்டேம். (இ. வி. 63. 68. 113.) உரையா. (இ. வி. 91.) நல்ல. (இ. வி. 120.) சுனைத்து. (இ. வி. 133.)]

---

(பழமொழி.)

---

39. கல்வியான் ஆய கழி நுட்பங் கல்லார்முற்
சொல்லிய நல்லவுந் தீயவாம்; எல்லாம்
இவர்வரை நாட! தமரை இல்லார்க்கு
நகரமுங் காடு போன் றாங்கு.

[நுட்பம். இரண்டாம்வேற்றுமைத் தொகை. எழுவாய்: நல்ல = நல்லவைகள். பயனிலை: தீயவாம் = தீயவைகள் ஆகும். இவர். (இ. வி. 153.)]

---

(நல்வழி.)

---

40. பூவாதே காய்க்கு மரமுமுள; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே; தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே, பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

[பூவாது. (இ. வி. 90.) தூவா. (இ. வி. 86.) விரைத்தாலும். (இ. வி. 142.) உள, உளர். (இ. வி. 125.) மக்களுளும். (இ. வி. 63. 113.) எனவே. (இ. வி. 114.)]

---

(நீதிநெறி விளக்கம்.)

---

41. கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்பபேசும்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை: "சொற்றநீர்
நில்லாததென்" என்று நாணி உரைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

[வெற்றுரை. (இ. வி. 119.) வலியுடைமை. (இ. வி. 150.) சொற்ற = சொன்ன. உரைப்ப. (இ. வி. 86. (3.) 140.) சொல்லாமே = சொல்லாமல் சொலல். (இ. வி. 94.)]

42. கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறூஉங்
குற்றந் தமதே பிறிதன்று; முற்றுணர்ந்துந்
தாம்அவர் தன்மை உணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்?

[கற்றன = தாங்கற்ற பொருள்களை. தமது. (இ. வி. 74.) தம்முணரா = தங்களுடைய இயல்பை உணராத. (இ. வி. 152. 91.) அன்று. (இ. வி. 125.)]

---

## VIII. பாடம்.

---

### நல்லோர். தீயோர். (நாலடி.)

---

43. கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ உணர்ச்சி? மற் றில்லாகும்; மண்டெரி
தான்வாய் மடுப்பினும் மாசுணங் கண்டுயில்வ,
பேரா, பெருமூச் செறிந்து.

[மண்டெரி = மண்டும் எரி. (இ. வி. 153.) கண்டுயில்வ = கண்டுயில்வன. (இ. வி. 37. 83.) பேரா = பெயராமல். (இ. வி. 90.) கேடெனினும். (இ. வி. 24. 142.)]

---

(நீதிநெறி.)

---

44. ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்
ஓதி அனையர் உணர்வுடையார்; தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வர் இரவாதார்; செல்வரும்
நல்கூர்ந்தார் ஈயார் எனின்.

[ஓதியும், ஓதாதும், நல்கூர்ந்தும். (இ. வி. 141.) ஓதி அனையர் = ஓதினாரோடு ஒப்பார். தூய்தாக. (இ. வி. 63. 120.) எனின். (இ. வி. 86.)]

---

(மூதுரை.)

45. நல்லாரைக் காண்பதுவு நன்றே; நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவு நன்றே; அவரோ
டிணங்கி இருப்பதுவு நன்று.

[நல்லாரைக் காண்பதுவும். (இ. வி. 145. 23. 24.) நன்று. (இ. வி. 93.) மிக்க. (இ. வி. 120.)]

46. தீயாரைக் காண்பதுவுந் தீதே; திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே; தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே; அவரோ
டிணங்கி இருப்பதுவுந் தீது.

[அற்ற. (இ. வி. 87. (1.) பகுதி: அறு. 82. (6.)) தீயார். (இ. வி. 93.)]

47. நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழிஓடிப்
புல்லுக்கும் அங்கே புசியும் ஆந்; தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளர் ஏல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

[பொருட்டு. (இ. வி. 60.) தொல்லுலகில். (இ. வி. 119.) உளர் ஏல் = இருப்பாராகில். (இ. வி. 86.)]

## IX. பாடம்.

### நல்லோர் சிநேகம். (மூதுரை.)

48. அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்; அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு.

[நீர்ப்பறவை என்பது தொடர்மொழி. (இ. வி. 150.) உற்றுழி = உற்ற உழி. கடைக்குறை. (இ. வி. 41.) இது இன்னிசை வெண்பா (இ. வி. 190.) அக்குளத்தில், (இ. வி. 25.)]

49. உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா;
உடன்பிறந்தே கொல்லும் வியாதி உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்;
அம்மருந்து போல்வாரும் உண்டு.

[வேண்டா. (இ. வி. 89.) போல்வார். (இ. வி. 95.) உடன்பிறந்தார். (இ. வி. 150.) என்று. (இ. வி. 114.) உளர் எ-கு உண்டு எ-து வழுவமைதி. (இ. வி. 137. 125.)]

---

50. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டிற்
காக்கை உகக்கும் பிணம்.

[நற்றாமரை = நல் + தாமரை. (இ. வி. 38.) காம் = காமம். (இடைக்குறை இ. வி. 41.) கற்பு. (பகுதி-கல். இ. வி. 94.)]

---

(நன்னெறி.)

---

51. நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ,
அல்லோர் வரவா னழுங்குவார் வல்லோர்;
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

[நகைமுகம். (இ. வி. 153.) இன்புறீஇ = இன்பு உற்று. (இ. வி. 17. 79.) வர. (இ. வி. 140.) வரவானகை = வரவால் + நகை. (இ. வி. 39.)]

---

52. பகர்ச்சி மடவார் பயில, தோன் பாற்றல்
இகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப நெகிழ்ச்சி
பெறும்; பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

[பகர்ச்சி, இரண்டாம் வேற்றுமைத் தொகை. மடவார், மூன்றாம் வேற்றுமைத் தொகை. பயில வர. (இ. வி. 140.) தோன்பாற்றல் = தோள்பினால் உண்டாகும் ஆற்றல். (இ. வி. 152.) பேதாய் = பேதையே. (இ. வி. 64.)]

---

(நாலடி.)

53. அறிமின், அறநெறி; அஞ்சுமின் கூற்றம்;
பொறுமின் பிறர்கடுஞ்சொல்; போற்றுமின் வஞ்சம்;
வெறுமின் வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

[அறிமின். (இ. வி. 84.) வினைதீயார் = தீவினையாருடைய.]

## X. பாடம்.

### நல்லினஞ்சேரல்.

54. ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்; ஒருங்
குலமாட்சி இல்லாருங் குன்றுபோ னிற்பர்,
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

[ஊர், ஏழாம் வேற்றுமைத்தொகை. எழுவாய்: இல்லாரும். பயனிலை: நிற்பர்.]

55. கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்த புல்
ஒல்காவே ஆகும் உழவர் உழுபடைக்கு;
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்.

[ஒல்கா, செல்லா, எதிர்மறைவினைமுற்று. (இ. வி. 89.)]

56. நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றந்தங்
குலநலத்தால் ஆகுவர் சான்றோர்; கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

[நிலநலத்தால் = நிலத்தினுடைய நன்மையினால். (இ. வி. 152.) தந்தம் = தம் + தம். (இ. வி. 74.) சேர. (இ. வி. 140). தீவளி. (இ. வி. 119.)]

57. மனத்தான் மறுவிலர் ஏனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்; புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே,
எறிபுனந் தீப்பட்டக் கால்.

[மனத்தான் = மனத்தில். (இ. வி. 137.) வேம். (இ. வி. 82. (7.) )]

---

(நாலடி.)

---

58. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே; குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ என்றும்
மதுரம் இலாளர் தொடர்பு.

[எழுவாய்: கேண்மை. தொடர்பு. பயனிலை: தின்றற்றே. தகைத்து. அன்ன, அற்று. (இ. வி. 109.)]

---

59. இற்பிறப் பெண்ணி, இடைதிரியார் என்பதோர்
நற்புடைக் கொண்டமை அல்லது, பொற்கேழ்
புனல்ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட!
மனம்அறியப் பட்டதொன் றன்று.

[கொண்டமை. (இ. வி. 94.) பூங்குன்ற நாட = பொலிவையுடைய மலை நாடனே! (இ. வி. 119. 64.)]

---

## XI. பாடம்.

---

### நட்பு. (நாலடி.)

---

60. யானை அனையவர் நண்பொரீஇ நாய் அனையார்
கேண்மை கெழீஇக் கொளல் வேண்டும்; யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

[ஒரீஇ = ஒருவி. கெழீஇ = கெழுவி. (இ. வி. 79.) எறிந்த வேல். (இ. வி. 143.) மெய்யதா = மெய்யது. ஆ. இதில் மெய்யது எ-து + ஏழாம் வேற்றுமை மயக்கமாகவந்த ஆறாம் வேற்றுமை. (இ. வி. 62. 137.) ஆ = ஆக. (இ. வி. 140.)]

---

61. பலநாளும் பக்கத்தார் ஆயினும் நெஞ்சிற்
சிலநாளும் ஒட்டாரோ டொட்டார்; பலநாளு
நீத்தார் மனக்கை விடலுண்டோ, தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

[நெஞ்சத்த = நெஞ்சினுலே. (இ. வி. 152.) நெஞ்சத்தியாத்தாரோடு. (இ. வி. 24.)]

---

62. கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல.

[கோட்டுப்பூ. (இ. வி. 68. 119.) வேட்டது. (இ. வி. 95.) நட்பாட்சி. இ. வி. 150. 96.) தோட்ட = தோண்டின.]

---

63. கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கின் அனையர், தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை உடையார் தொடர்பு.

[கடையாயார் = கடைவரிசையில் உள்ளார். ஆயார் = ஆகினர். (இ. வி. 82. (7.)) அனையர். (இ. வி. 109.) எண்ணரும் = எண்ணுதற்கரிய. (இ. வி. 153. 121.)]

---

64. கழுநீருட் காரட கேனும் ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம்; விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே ஆயினும் மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

[கள். (இ. வி. 121. 154.) விழுமிதா = விழுமியது + ஆ = ஆக. (இ. வி. 93.

---

65. தெளிவிலார் நட்பிற் பகைநன்று; சாதல்
விளியா வருநோயி னன்றால்; அளிய
இகழ்தலிற் கோறல் இனிதேயாம்; இல்ல
புகழ்தலின் வைதலே நன்று.

[நட்பின். (இ. வி. 61. ஒப்பு.) ஆல், அசைச்சொல். அளிய, (இ. வி. 110.) கோறல் = கொல்லல். (இ. வி. 41.)]

---

## XII. பாடம்.

### பிழைபொறுத்தல். (நாலடி.)

66. மரீஇப் பலரொடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

[மரீஇ, பொரீஇ, பரீஇ. (இ. வி. 79.) பன்னாள்=பல்நாள். (இ. வி. 39. 36.) பொருட்டக்கார்=பொருளாகத்தக்கவர். (இ. வி. 57. 37.)]

67. நல்லார் எனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லார் எனினும் அடக்கிக் கொளல் வேண்டும்;
நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

[என. (இ. வி. 114.) நனி. (இ. வி. 120.) கொண்டாரை. (இ. வி. 124. (5.) ) புல்லிதழ். (இ. வி. 150.) பூவிற்கும்=பூ+இன்+கு+உம். (இ. வி. 23. 65. 35. 24.)]

68. செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டூடார்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்;
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரே
தாம் வேண்டிக் கொண்டார் தொடர்பு.

[செறுத்தோறும் = செறுக்குந்தோறும். (இ. வி. 153.) நசை = நசைந்து. (இ. வி. 153.) வாழ்நர். (இ. வி. 95 = வாழ்வர்.)]

69. இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றே? நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு.

[இறப்பவே. (இ. வி. 140.) நிறக்கோங்கு உருவ வண்டு, ஆர்க்கும் உயர் வரை நாட! = பொன்னிறத்த கோங்கம் பூவிலே அழகிய வண்டுகள் ஆர்ப்பரிக்கும் உயர்ந்த மலை நாடனே. (இ. வி. 152. 162.) ஒருவர், இருவர். (இ. வி. 159.)]

70. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தங்
கவிகை நாவாய் கரைஅலைக்குஞ் சேர்ப்ப!
விடுதற் கரியார் இயல்பிலரேல் நெஞ்சஞ்
சுடுதற்கு மூட்டிய தீ.

[மடிதிரை. (இ. வி. 153.) தந்திட்ட. (இ. வி. 124. (5.)) தீ. (இ. வி. 119.)]

---

## XIII. பாடம்.

---

### நட்பு. (நாலடி.)

---

71. இன்னா செயினும் விழைதங் கேளிரைத்
துன்னாத் துறத்த றகுவதோ? துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப! களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

[துன்னருஞ் சீர் விண்குத்து நீள் வரை வெற்ப! = கிட்டுதற்கு அரிய தன்மையை உடைய வானைப் பொருந்திய நீண்ட மலை நாடனே! களைப. (இ. வி. 83.) குத்திற்று. (இ. வி. 83.)]

---

72. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்; கலந்தபிற்
றீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமும் அவரிற் கடை.

[கலந்து = நட்புக்கொண்டபின். நட்பாளர்த் திருத்த வேண்டுமே அல்லாமல் அவர்களுடைய குற்றங்களை பலர்க்கு அறிவிக்கக் கூடாது.]

---

73. தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயின் அவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் ளடக்கிக் கொளல்.

[தமர். (இ. வி. 121.) அன்மை. (இ. வி. 94. 152.)]

---

74. குற்றமும் ஏனைக் குணமும் ஒருவனை
நட்டபி னாடித் திரிவேனேல் நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வழிச் செல்க,
அறைகடல்சூழ் வையம் நக.

[காவா = காக்காமல். செல்வழி=(செல், வ், உழி), (இ. வி. 153. 63. 152. 25.) செல்க. (இ. வி. 85.)]

---

75. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்,
மாரிபோல் மாண்ட பயத்ததாம்; மாரி
வறந்தக்காற் போலுமே, வால்அருவி நாட!
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

[சீரியர் = சீருடையர். (இ. வி. 93.) சிறப்பிற்றாய் = (சிறப்பு + இன் + து + ஆய்) சிறப்பினையுடையதாகி. (இ. வி. 93.) பயத்ததாம் = பயனையுடையதாம். (இ. வி. 93.)]

---

## XIV. பாடம்.

---

### நட்பு. (நாலடி.)

---

76. நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால் நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்த னிரயத்துள் ஒன்று.

[நுகர்வுடைமை. (நுகர், வ், உடைமை.), (இ. வி. 153.) விழைவிற்று = விழைவினது. (இ. வி. 93.)]

---

77. பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்; அருகெல்லாஞ்
சந்தன நீள் சோலைச் சாரன் மலை நாட!
பந்தமி லாளர் தொடர்பு.

[எழுவாய்: தொடர்பு. பயனிலை: நந்தும். வைத்தீப்போல் = வைக்கோல் நெருப்பைப்போல். (இ. வி. 132.) நீள் = நீண்ட (இ. வி. 153.)]

---

78. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை ஆம்பல் ஒக் கல்லா,
பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

[நீர் = நீரிலே. (இ. வி. 152.) கடைத்தும் = இடத்தை உடையன ஆயி னும். (இ. வி. 93. 113.) ஒக்கல்லா = ஒக்க மாட்டாது. (ஒக்கு + அல் லா.) (இ. வி. 125. 89.) கொளினும் (= கொண்டாலும். இ. வி. 86. 142.)]

---

79. முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
தெற்றுக்கண் டன்ன விரலான் றெயிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

[முற்றல் = முற்று, அல்லாத, (இ. வி. 153.)]

---

80. முட்டுற்ற போழ்தின் முடுகி, என் னார் உயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல், நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க,
நெடுமொழி வைய நக.

[எழுவாய்: யான் (தொக்கு நிற்கிறது.) பயனிலை: செல்க. (இ, வி. 85.) ஆர். (இ. வி. 121.) செல்வுழி=செல், + உழி. இதில் வ் இடைநிலை. (இ. வி. 153. 81.) நெடு-மொழி. (இ. வி. 154.) நக. (இ. வி. 140.)]

---

81. ஆன்படு நெய்பெய் கலனுள் அதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ, தேம்படு
நல்வரை நாட! நயம் உணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

[எழுவாய்: நட்பு. பயனிலை: அனைத்து. அரோ, அசைநிலை. படு. (இ. வி. 153.) தேம் = தேன். (இ. வி. 137. 93.) பெய்தனைத்து = பெய்தாற்போ லும். (இ. வி. 137. 93.) இதில் பெய்து = பெய்தால். நாட = நாடனே. (இ. வி. 64.) ஒரீஇ = ஒருவி. (இ. வி. 79.)]

82 உருவிற் கமைந்தான்கண் ஊராண்மை இன்மை
பருகற் கமைந்தபா னீரளா யற்றே
தெரிவுடையார் தீயினத்தர் ஆகுத னாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

[எழுவாய்: இன்மை. ஆகுதல். பயனிலை: அளாயற்று. விட்டற்று. அளாய் = அளாவி. விட்டு. இவை அளாவினால், விட்டால் என்று பொருள் கொள்ளும். (இ. வி. 117.) பானீர்=பாலிலேநீரை. (இ. வி. 152.)]

---

## XV. பாடம்.

---

(தி. குறள்.)

---

83. செயற் கரிய யாவுள நட்பின்; அது போல்
வினைக் கரிய யாவுள காப்பு?

[நட்பின். (ஒப்பு. இ. வி. 61.) உள. (இ. வி. 125.) யா. (இ. வி. 6.)]

---

84. நிறை நீர நீரவர் கேண்மை பிறை; மதிப்
பின்னீர பேதையார் நட்பு.

[பிறைபோல் அறிவுடையவரது நட்புக்கள் நிறையுந்தன்மையினவாம் நிறைந்த சந்திரன்போல் பின்னே நாடோறுங் குறையுந் தன்மையுடையனவாம் அறிவில்லாதவரது நட்புக்கள். நீர (இ. வி. 93.)]

---

85. நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக் கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

[எழுவாய்: நட்டல். மிகுதிக்கண். (இ. வி. 63.)]

---

86. முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

[நெஞ்சத்து அகம் நக. (இ. வி. 119. 140.)]

---

87. உடுக்கை இழந்தவன் கைபோல, ஆங்கே
இடுக்கண் களைவதா நட்பு.

---

88. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில்
கொட்பின்றி ஒல்லும் வாய் ஊன்று நிலை.

[நட்பிற்கு. (இ. வி. 65.) இருக்கை. (இ. வி. 94.) எனில். (இ. வி. 86 (2.) ஊன்றும் நிலை. (இ. வி. 87. (3.) )]

---

## XVI. பாடம்.

---

### நட்பாராய்தல். (தி. குறள்.)

---

89. நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

---

90. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடை முறை
தான் சாந் துயரந் தரும்.

[கொள்ளாதான் ≐ கொள்ளாதவன். சாம்=சாகும். (இ. வி. 82. (7.) )]

---

91. கேட்டினும் உண்டோர் உறுதி, கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

---

92. ஊதியம் என்ப தொருவற்குப்
பேதையார் கேண்மை ஒரீஇ விடல்.

[ஒருவற்கு = ஒருவனுக்கு. (இ. வி. 60. 35. 108.)]

---

93. உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ,
கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

[உள்ளற்க. (இ. வி. 92.) சிறுகுவ. (இ. வி. 81. 95.)]

---

94. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
அடுங்காலை உள்ளினும் உள்ளஞ் சுடும்.

---

## XVII. பாடம்.

---

### நட்பு. (தி. குறள்.)

---

95. மருவுக மாசற்றார் கேண்மை, ஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.

[மருவுக. (இ. வி. 85.) ஈத்தும் = ஈந்தும். (இ. வி. 41. (1.) 141.)]

---

96. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.

[போலினும். (இ. வி. 86. 142.)]

---

97. உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

[உறின் நட்டு, அறின் ஒருவும். (இ. வி. 86. (2.) 87.)]

---

98. உறுவது சீர்தூக்கு நட்பும், பெறுவது
கொள்வாருங், கள்வரு நேர்.

[நேர். (இ. வி. 109.) உறுவது = நட்பால் வரும் பிரயோசனத்தை.]

---

99. நகைவகையர் ஆகிய நட்பிற்
பகைவராற் பத்தடுத்த கோடி உறும்.

[நகைக்கேதுவாகிய நட்பில்வரும் இன்பங்களில் பகைவரால் வருந் துன்பங் கள் மிக நல்ல. பத்தடுத்தகோடி = பத்தாகத் தொடுத்த கோடி.]

---

100. ஒல்லுங் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.

[உடற்றுபவர். (இ. வி. 95.) சொல்லாடார் = சொல்லாதவராக. விடல். (இ. வி. 85.)]

---

## XVIII. பாடம்.

---

### நட்பு (தி. குறள்.)

---

101. கனவினும் இன்னாது, மன்னோ, வினை வேறு
சொல் வேறு பட்டார் தொடர்பு.

[கனவினும், (இ. வி. 63. 113.)]

---

102. சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

[நேரா, (இ. வி. 90. = நேராமல்.)]

---

103. இனம்போன் றினமல்லார் கேண்மை, மகளிர்
மனம்போல வேறு படும்.

---

104. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்
ஆகுதன் மாணார்க் கரிது.

[கடைத்தும் = இடத்தும், (இ. வி. 86. 142.)]

---

105. சொல்வணக்கம் ஒன்னார்கட் கொள்ளற்க
வில்வணக்கந் தீங்கு குறித்தமை யான.

[குறித்தமையான், (இ. வி. 94. 59.) குறித்தமை யான்.]

---

## XIX. பாடம்.

### நன்றி. (மூதுரை.)

106. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல், எனவேண்டா:—நின்று
தளரா வளர்தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான்றரு தலால்.

[இது நேரிசைவெண்பா. (இ. வி. 189.) கொல் எ.நு அசைநிலை. (இ. வி. 116.) தளரா = தளராமல் (இ. வி. 90.) வளர். (இ. வி. 153.)]

107. நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப்போற் காணுமே,— அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

[கல் + மேல் = கன்மேல். (இ. வி. 36.) எழுத்திற்கு = எழுத்து இன் + கு. (இ. வி. 65.) எழுவாய்: உபகாரம். பயனிலை: காணும், நேர் (ஆகும்.) நெஞ்சத்தார். (இ. வி. 66. 93. 123.)]

108. வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போற், பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரங்
கல்லின்மேல் இட்ட கலம்.

[அதனுக்கு = அது + அன் + கு. (இ. வி. 108.)]

### (நன்னெறி.)

109. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பெறும்; பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

[பெய்யா. (இ. வி. 86. (1.)) செய்யார், ஆக்குபவர், கடல், நீர். (வேற்றுமைத்தொகை. (இ. வி. 152.) எழுவாய்: செல்வம், புயல். பயனிலை: ஆம், கொடுக்கும்.)]

110. பேர் அறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே,
வீரமொழி காக்க விரைகுவார்; நேர்இழாய்!
மெய் சென்று தாக்கும் வியங்கோல் அடிதன்மேற்
கை சென்று தாங்குங் கடிது.

[வீரமொழி. (இ. வி. 66. 27.) விரைகுவார். (இ. வி. 31.) பேர். (இ. வி. 121.) இழாய், இழைகளையுடையவளே! 64. 93.]

---

## XX. பாடம்.

---

### நன்றி அறிதல். (நாலடி.)

---

111. தினை அனைத்தே ஆயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனை அனைத்தா உள்ளுவர் சான்றோர்; பனை அனைத்
தென்றுஞ் செயினும், இலங்கருவி நன்னாட!
நன்றில நன்றறியார் மாட்டு.

[இலங்கு, அருவி, நல், நாட. (இ. வி.) 153, 4, 7. 64.) மாட்டு. (63.)]

---

112. மலைநலம் உள்ளுங் குறவன்; பயந்த
விளைநிலம் உள்ளும் உழவன்; சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர்; கயந்தன்னை
வைததை உள்ளி விடும்.

[உள்ளும். (இ. வி. 137.) கயம் = கயவன். (இ. வி. 102.) விடும். (இ. வி. 124. (5.))]

---

113. ஒரு நன்றி செய்தவர்க் கொன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்; கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்,
எழுநூறுந் தீதாய் விடும்.

[தீதாய். (இ. வி. 120.)]

---

ன்கொன் றறிபவர் தாழி தொலைப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க; எறி திரை
சென்றுலாஞ் சேர்ப்ப! அது போல நீர்போயும்,
ஒன்றிரண்டாம் வாணிகம் இல்.

[சூழ்க. (இ. வி. 85.) உலாம். (இ. வி. 87. (3.) ) போயும். (இ. வி. 141, 86. (1.) )]

---

115. நாடி நமர் என்று நன்கு புறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழல், கிளர்மணி
நீடு கல் வெற்ப! நினைப்பின்றித் தாம் இருந்த
கோடு குறைத்து விடல்.

[நன்கு. (இ. வி. 120.) புறந்தந்தார்க்கு. (இ. வி. 150) ]

---

## XXI. பாடம்.

---

### செய்ந்நன்றி அறிதல். (தி. குறள்.)

---

116. செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமும் மாற்றல் அரிது.

[வையகம், வானகம். (இ. வி. 150.) அரிது. (இ. வி. 93. அரு.) ]

---

117. காலத்தி னாற் செய்த நன்றி, சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

[காலத்தினால். (இ. வி. 137.) சிறிது, பெரிது. (இ. வி. 93. சிறு, பெரு.) மாண. (இ. வி. 120.) எனினும். (இ. வி. 142.)]

---

118. பயன் றூக்கார் செய்த உதவி,
நயன் றூக்கி னன்மை கடலிற் பெரிது.

[பயன் றூக்கார். (இ. வி. 38, 152.)]

119. தினைத்துணை நன்றி செயினும்,
பனைத்துணையாக் கொள்வர் பயன்றெரிவார்.

[தினைத்துணை நன்றி. (இ. வி. 102. 154.)]

---

120. உதவி வரைத்தன் றுதவி
உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து.

[வரைத்து. (இ. வி. 93.)]

---

121. மறவற்க மாசற்றார் கேண்மை;
துறவற்க துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

[மறவற்க, துறவற்க. இ. வி. 92.) துன்பத்துட்டுப்பாயார். (இ. வி. 63. 66. 37.) துப்பாயார் = துப்பு ஆனவர்கள். (இ. வி. 87. (1.) 95.)]

---

122. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

[நன்றி. (இ. வி. 96.)]

---

## XXII. பாடம்.

---

### அறிவுடையோர். (மூதுரை.)

---

123. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாம் அவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்;—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர் நிழலைத் தந்து
மறைக்கும் ஆல், கண்டீர், மரம்.

[சாம் = சாகும். (இ. வி. 87.) ஆம் = ஆகும். இடைக்குறை. (இ. வி. 87. 41.) இடினும். (இ. வி 124. (5) 142.)]

---

(நன்னெறி.)

---

124. என்று முகமன் இயம்பா தவர் கண்ணுஞ்
சென்று, பொருள்கொடுப்பார் தீதற்றோர்; துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ,
நாவிற் குதவும் நயந்து?

[கண்ணும். இ. வி. 63. 113.) பூங்கை (பூ + கை. (இ. வி. 41. 121.) புகழ வோ, (இ. வி. 140. 112.)]

---

125. தங் குறைதீர் வுள்ளார், தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்; திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறை இருளை நீக்குமே நின்று.

[தீர்வு. (இ. வி. 94.) உறூஉம். (இ. வி. 40.) தீர்க்கிற்பார் = தீர்ப்பார். (இ. வி. 108.) உலகினிறை. (இ. வி. 40.) மேனின்று. (இ. வி. 39.)]

---

126. தம்மையுந் தங்க டலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார், தமைஅடைந்தோர் தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல்?

[தங்கடலைமையும்=தங்களுடைய தலைமையையும். (இ. வி. 37.) தமை = தம்மை. (இ. வி. 41.) எழுவாய்: உயர்ந்தோர், செல்வர், கடல் பயநிலை: மதியார், தீர்ப்பர், செல்லாதோ.]

---

127. எள்ளா திருப்ப இழிஞர்போற் றற்குரியர்;
விள்ளா அறிஞர்அது வேண்டாரே; தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுளம் அன்றிக்
கரைகாப் புளதோ கடல்?

[இருப்ப. (இ. வி. 86.) கட்டு. (இ. வி. 153.) கரைகாப்பு. (இ. வி. 154.) உளது. (இ. வி. 41. 125) விள்ளா, தள்ளா. (இ. வி. 91.)]

---

## XXIII. பாடம்.

### பெருமை. (தி. குறள்.)

128. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

[ஒக்கும். ஒவ்வா (இ. வி. 125.)]

---

129. மேல் இருந்தும் மேல் அல்லார் மேல் அல்லர்; கீழிருந்தும்
கீழ் அல்லார் கீழ் அல்லவர்.

---

130. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

[செயல். (இ. வி. 152 = செயல்களை.)]

---

131. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப்
பெரியாரைப் பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.

[கொள்வேம். (இ. வி. 77. 83.)]

---

132. பணியும்ஆம் என்றும் பெருமை; சிறுமை
அணியும்ஆம் தன்னை வியந்து.

[ஆம் இரண்டும் அசைநிலைகள். (இ. வி. 116.) பெருமை, சிறுமை. (இ. வி. 162. (5.) )]

---

133. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

---

# XXIV. பாடம்.

## செல்வநிலையாமை. (நாலடி.)

134. அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கிஉண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

[அற (இ. வி. 159.) வறிஞர். வறி-ஞ்-அர். ஞகரம் இடைநிலை. (இ. வி. 93. வறு.) இடத்து. (இ. வி. 63.) பாற்று = பாலையுடையது. (இ. வி. 93. பால் + து.)]

135. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;
அகடுற யார்மாட்டும் நில்லாது, செல்வம்,—
சகடக்கால் போல வரும்.

[யார்மாட்டும். (இ. வி. 63.) துகள், தீர். (இ. வி. 37. 153.)]

136. நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்
தொன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க;
சென்றன சென்றன வாழ்நாள், செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

137. இழைத்தநாள், எல்லை இகவா, பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை; ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர், வழங்குமி னாளைத்
தழீஇந் தழீஇந் தண்ணம் படும்.

[ஒரீஇ. (இ. வி. 79.) இகவா. இ. வி. 86. (1.)) வைத்தீர் = வைத்தவர்களே (இ. வி 95.)]

## XXIII. பாடம்.

---

### பெருமை. (தி. குறள்.)

---

128. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்;
சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்.

[ஒக்கும். ஒவ்வா (இ. வி. 125.)]

---

129. மேல் இருந்தும் மேல் அல்லார் மேல் அல்லர்; கீழிருந்தும்
கீழ் அல்லார் கீழ் அல்லவர்.

---

130. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

[செயல். (இ. வி. 152 = செயல்களை.)]

---

131. சிறியார் உணர்ச்சியுள் இல்லைப்
பெரியாரைப் பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.

[கொள்வேம். (இ. வி. 77. 83.)]

---

132. பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

[ஆம் இரண்டும் அசைநிலைகள். (இ. வி. 116.) பெருமை, சிறுமை. (இ. வி. 162. (5.))]

---

133. பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்.

---

## XXIV. பாடம்.

---

### செல்வநிலையாமை. (நாலடி.)

---

134. அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

[அறு (இ. வி. 159.) வறிஞர். வறி-ஞ்-அர். ஞகரம் இடைநிலை. (இ. வி. 93. வறு.) இடத்து. (இ. வி. 63.) பாற்று = பாலையுடையது. (இ. வி. 93. பால் + து.)]

---

135. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க;
அகடுற யார்மாட்டும் நில்லாது, செல்வம்,—
சகடக்கால் போல வரும்.

[யார்மாட்டும். (இ. வி. 63.) துகள், தீர். (இ. வி. 37. 153.)]

---

136. நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்
தொன்றின ஒன்றின வல்லே செயிற் செய்க;
சென்றன சென்றன வாழ்நாள், செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

---

137. இழைத்தநாள், எல்லை இகவா, பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தார் ஈங்கில்லை; ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர், வழங்குமின் நாளைத்
தழீஇத் தழீஇத் தண்ணம் படும்.

[ஒரீஇ. (இ. வி. 79.) இகவா. இ. வி. 86. (1.)) வைத்தீர் = வைத்தவர்களே (இ. வி. 95.)]

---

138. செல்வர் யாம் என்று தாஞ் செல்வுழி எண்ணாத
புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

[செல்வுழி. (செல், வ், உழி. இ. வி. 63. 153.) புல். (இ. வி. 119.)]

---

139. உண்ணான், ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்,
துன்னருங் கேளிர் துயர்களையான், கொன்னே
வழங்கான், பொருள்காத் திருப்பானேல் அஆ!
இழந்தானென் றெண்ணப் படும்.

[உண்ணான். (இ. வி. 89) புகழ். (இ. வி. 162. காரிய ஆகுபெயர்.) துன். அருங் கேளிர். (இ. வி. 153. 121.)]

---

## XXV. பாடம்.

---

### நிலையாமை. (நாலடி.)

---

140. உடாஅதும், உண்ணாதுந் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார், கொடாஅது
வைத்தீட்டினார் இழப்பர்; வான்றோய் மலைநாட!
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

[தேனீ. (இ. வி. 152.)]

---

141. நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி இடத்தே துறந்தார்; புரைதீரா
மன்னா இளமை மகிழ்ந்தாரே, கோல்ஊன்றி
இன்னாங் கெழுந்திருப் பார்.

[தீரா, மன்னா. (இ. வி. 91.)]

---

142. வெறிஅயர் வெங்களத்து, வேன் மகன் பாணி
முறிஆர் நறுங் கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்ற மகிழ்ச்சி
அறிவுடை யாளர் கண் இல்.

[எழுவாய்: மகிழ்ச்சி. பயனிலை: இல்.]

---

143. பருவம் எனைத்துள? பல்லின் பால் ஏனை?
இரு சிகையும், உண்டீரோ? என்று, வரிசையால்
உண்ணாட்டம் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணார் அறிவுடை யார்.

---

144. "மற்றறிவா நல்வினை, யாம்" இளையம், என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மின் ;—
முற்றி இருந்த கனி ஒழியத் தீவளியால்
நற் காய் உதிர்தலும் உண்டு.

[இளையம். (இ. வி, 93.)]

---

145. ஆட் பார்த் துழலும் அருளில்கூற் றுண்மையால்,
தோட் கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்; பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாய் அலறக் கோடலான், மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

---

## XXVI. பாடம்.

---

### நிலையாமை. (தி. குறள்.)

---

146. நில்லா தவற்றை நிலையின, என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

[நில்லாதவற்றை. (இ. வி. 95.) நிலையின. (இ. வி. 93.)]

---

147. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று.

[பெருஞ்செல்வம் (வருதல்) கூத்தாடுதல் செய்கின்ற சபையினிடத்தே கூட்டம் வருதல் போலும். குழாத்தற்றே. [குழாம், அத்து, அற்றே.] (இ. வி. 66. 109.)]

---

148. நாள் என ஒன்றுபோற் காட்டி, உயிர் ஈரும்
வாள துணர்வார்ப் பெறின்.

---

149. நாச்செற்று, விக்குள்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

---

150. நெருநல் உளன் ஒருவன், இன்றில்லை, என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.

---

151. ஒருபொழுதும் வாழ்வ தறியார்; கருதுப
கோடியும் அல்ல பல.

[கோடி அளவும் அன்றி அதனினும் பலவற்றைக் கருதுப. (இ. வி. 83.)]

---

152. குடம்பை தனித்தொழியப் புட் பறந் தற்றே,
உடம்போ டுயிரிடை நட்பு.

[புள். (இ. வி. 34.) உயிரிடை. (இ. வி. 63.)]

---

153. புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுட்
சேக்கில் இருந்த உயிர்க்கு

[புக்கில் அமைந்தின்று கொல்லோ = என்றும் உள்ள வீடு இல்லையோ?]

---

## XXVII. பாடம்.

---

### நிலையாமை. (நல்வழி.)

---

154. எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழு மலி நோய்ப் புன் குரம்பை; நல்லார்
அறிந்திருப்பார், ஆதலினால் ஆங்கமல நீர்போற்
பிரிந்திருப்பார், பேசார் பிறர்க்கு.

[புழுமலி நோய் புன் குரம்பை. (இ. வி. 157. 153.)]

---

155. "ஒரு நாள் உணவை ஒழி" என்றால் ஒழியாய்;
இரு நாளைக் கேல் என்றால் ஏலாய்; ஒருநாளும்
என்னோ வறியாய்; இடும்பைகூர் என்வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது.

[கூர். (இ. வி. 153.)]

---

### (நாலடி.)

---

156. இச்சார்வின் ஏமாந்தேம், ஈங்கமைந்தேம், என்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்; அச்சார்வு
நின்றன போன்று நிலையா என உணர்ந்தார்
என்றும் பரிவ இலர்.

[பரிவதிலர். (இ. வி. 95. 125. பரிவது+இலர்.)]

---

157. மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்டகுடையர் நிலைமிசைத்
துஞ்சினர் என் றெடுத்துத் தூற்றப் பட்டார், அல்லால்
எஞ்சினர் இவ்வுலகத்தில்.

[மலைமிசை. (இ. வி. 63.), குடையர். (இ. வி. 93.)]

---

158. வாழ்நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால் வாழ்நாள்
உலவாமுன் ஒப்புர வாற்றுமின், யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

[நாட்கு = நாளுக்கு. வயங்கொளி. (வயங்கு, ஒளி. இ. வி. 153.) நிலவார் = நிலையார். (இதில் நிலை என்னும் பகுதிக்குப்பதிலாக நில என்பது வந்தது.)]

---

159. மன்றம் கறங்க மணப்பறை ஆயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் பின்றை
ஒலித்தலும் உண்டாம் என் றுய்ந்து போம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.

[ஆம், அசைநிலை. எழுவாய்: மனம். பயனிலை: வலிக்கும்.]

---

## XXVIII. பாடம்.

---

### நிலையாமை. (நாலடி.)

---

160. சென்றே எறிப ஒருகால்; சிறுவரை
நின்றே எறிப பறையினை; நன்றே காண்!
முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

[எறிப. (இ. வி. 83.) பறையினை. (இ. வி. 65.) கொட்டினுள். (இ. வி. 63.)]

---

161. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்; மணங்கொண்டீண்
டுண்டுண் டுண்டென்னும் உணர்விலாற், சாற்றுமே
டொண்டொண் டொடென்னும் பறை.

[உணர்விலான் = புல்லறிவாளனுக்கு. (இ. வி. 152.) உண்டுண்டுண்டு என்பன ஒலிக்குறிப்பாகிய அடுக்கு மொழிகள்.]

---

162. புன்றுனிமே னீர்போ னிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை; இன்னினியே,
நின்றான் இருந்தான், கிடந்தான் றன் கேள் அலறச்
சென்றான் எனப் படுதலான்.

[புன்றுனிமே னீர் போனிலையாமை=புல் நுனி மேல் நீர் போல் நிலையாமை. (இ. வி. 39.) எனப்படுதலான். (இ. வி. 124. (1.))]

---

163. கேளாதே வந்து, கிளைகளாய் இற்றோன்றி,
வாளாதே போவரால், மாந்தர்கள் வாளாதே
சேக்கை மரன் ஒழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

[இற்றோன்றி=வீட்டில் தோன்றி. (இ. வி. 152. 38.) மரன்=மரம். (இ. வி. 17.) 152. பாட்டையுங் காண்க.]

---

(நன்னெறி.)

---

164. கொள்ளுங் கொடுங் கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே; வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார்? பேசு!

[கொடும். (இ. வி. 121.) கொல்வான்=கொல்லும் பொருட்டு. இது எதிர்காலத்து வினையெச்சம். (இ. வி. 86.) குறுகுதல், பெருகுதல். (இ. வி. 94. 63.) உய்க. (இ. வி. 85.)]

---

(நீதிநெறி.)

---

165. இளையம் முதுதவம் ஆற்றுதும் தோற் றென்
றிளைவின்று கண்பாடும் ணூழே, விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேல்; காண்பாருந்
தாழாமே நோற் பார் தவம்.

[இளையம். (இ. வி. 93.) முது=முதுமையிலே. ஆற்றுதும் தோற்று=தோற்று ஆற்றுதும். (இ. வி. 83. 77.) தாழாமே=தாழாமல். 144. பாட்டையுங் காண்க.]

---

## XXIX பாடம்.

### உடம்பு. (நாலடி.)

166. மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ, னொய்யதோர் புக்கிலே? யாக்கைக்கோர்
ஈச்சிறகன்னதோர் தோல் அறினும், வேண்டுமே
காக்கை கடிவதோர் கோல்.

[ஈச்சிறகன்ன = ஈயினது சிறகு போன்றது. கடிவது = ஓட்டுவதற்கு.]

167. கொன்னே கழிந்தன் றிளமையும், இன்னே
பிணியொடு மூப்பும் வருமால், துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே! போதியோ
நன்னெறி சேர நமக்கு.

[போதியோ. (இ. வி. 83.)]

168. தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி, மற்
றெம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல், என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

[இகழ்ந்தமை. (இ. வி. 94.) நிரயத்து. (இ. வி. 63.)]

169. காலைச்செய் வோம் என் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்; மாலை
கிடந்தான், எழுத லரிதான்; மற் றென்கொல்,
அறங் காலைச் செய்யாத ஆறு?

170. சென்றநாள் எல்லாஞ் சிறுவிரல் வைத் தெண்ணலாம்;
நின்றநாள் யார்க்கும் உணர்வரி தென் றொருவன்
தன்மை புரியாது தானலைப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது, புறம்.

[எண்ணலாம். (இ. வி. 124. (4.)) புறம், அதினும் பெரிதொன்றும் இல்லை.]

171. பட்ட வகையாற் பலரும் வருந்தாமற்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்;—
முட்டுடைத் தாக, இடைதவிர்ந்து வீழ்தலின்
நட்டுருள் ஆதலே நன்று

[நல்லறம் = நல்லறத்தைச் செய்வாயாக. பயிரை நட்டு அதன் பலனை அருதவன் ஆதல்.]

---

## XXX. பாடம்.

---

### நிலையாமை. (பழமொழி.)

---

172. இன்றி அமையா இருமுது மக்களும்
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்பவோ?
ஒன்றும் வகையான் அறஞ்செய்க, ஊர்க்குளிற்
குன்று வழித்டுப்ப தில்.

[கொள்பவோ. (இ. வி. 83. 112.)]

---

173. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து,
நோய் கான் பொழுதின் அறஞ் செய்வார்க் காணாமை,
நாய் கானிற் கற்காணா ஆறு.

[காணாமை, அவ்வழியைக் காணாமலிருக்குந் தன்மையானது.]

---

### (நல்வழி.)

---

174. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே, கேளுங்கள்! கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்,
பாவிகாள் அந்தப் பணம்?

[யாரே. (இ. வி. 111. (6.)) பாவிகாள். இ. வி. 64.]

---

175. ஆறிடு மேடு மடுவும்போல் ஆஞ்செல்வம்,
மாறிடும், ஏறிடும்; மாநிலத்தீர்! சோறிடுந்,
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

---

(நீதிநெறி.)

---

176. பெற்ற சிறுகப் பெறாத பெரிதுன்னுஞ்
சிற்றுயிர்க் காக்கம் அரிதம்மா! முற்றும்
கரவா வாய் மடுத்து, வல்லிராய் மாய
எரிதழல் மாயா திரா.

[பெற்ற=பெற்றவைகளை. பெறாத=பெறாதவைகளை, (இ. வி. 95. 152.) சிறுக, பெரிது=சிறியவைகள் என்றும், பெரியவைகள் என்றும். சிற்றுயிர்க்கு. (இ. வி. 121.)]

---

177. வள்ளன்மை இல்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போறு நனிநல்ல; கொன்னே,
"அருளிலன்," "அன்பிலன்," "கண்ணறையன்" என்று
பலரால் இகழப் படான்.

[வள்ளன்மை = ஈகைத்தன்மை. (இ. வி. 94.)]

---

## XXXI. பாடம்.

---

### வெஃகாமை. (தி. குறள்.)

---

178. நடுவின்றி நன்பொருள் வெஃகிற்,
குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்.

---

179. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

[படு (இ. வி. 153.) அன்மை (அல் + மை, இ. வி. 94.)]

---

180. சிற்றின்பம் வெஃகி, அறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

181. இலமென்று வெஃகுதல் செய்யார்,
புலம்வென்ற புன்மையில் காட்சி யவர்.

[காட்சியவர். (இ. வி. 96.) இலம். (இ. வி. 93. 125.)]

182. அஃகி அகன்ற அறிவென்னாம், யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்?

183. வேண்டற்க வெஃகியாம் ஆக்கம்; விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

[விளைவயின். (இ. வி. 153.) வேண்டற்க. (இ. வி. 92.)]

## XXXII. பாடம்.

### அவாவறுத்தல் (தி. குறள்.)

184. தூஉய்மை என்பது அவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

[வேண்ட. (இ. வி. 140.) (4.))]

185. அற்றவர் என்பார், அவா அற்றார்; மற்றையார்
அற்றாக அற்ற திலர்.

[அற்றவர் = துன்பமற்றவர்.]

186. அஞ்சுவ தோரும் அறனே, ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா.

[ஒரும். அசைச்சொல். அறன் = அறம். (இ. வி. 17.)]

187. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம், அஃ துண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

---

188. இன்பம் இடையறா தீண்டும், அவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

[எழுவாய்: இன்பம். பயனிலை: அறுதி. துன்பத்திட்டுன்பம் = மிகுதி யான துன்பம். (இ. வி. 37.)]

---

## XXXIII. பாடம்.

---

### அடக்கம். (நீதிநெறிவிளக்கம்)

---

189. முற்றும் உணர்ந்தவர் இல்லை; "முழுவதூஉங்
கற்றனம்" என்று களியற்க; சிற்றுளியாற்
கல்லுந் தகரும்; தகரா, கனங்குழாய்!
கொல்லுலைக் கூடத்தி னால்.

[கற்றனம். (இ. வி. 83.) களியற்க. (இ. வி. 93.) சிற்றுளியால். (இ. வி. 121.) குழாய் = குழையையுடையவளே! (இ. வி. 64. 93.)]

---

190. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா, பெரிதென் றகமகிழ்க; தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றதெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று.

[கற்றதெல்லாம்...நாம் = நாங் கற்றது முழுதும்.]

---

191. விலக்கிய ஓம்பி, விதித்தனவே செய்யு
நலத்தகையார் நல்வினையுந் தீதே, "புலப்பகையை
வென்றனம், நல்லொழுக்கி னின்றேம்" பிறவென்று
தம்பாடு தம்மிற் சொலின்.

[பிற, அசைச்சொல் (இ. வி. 116.)]

---

192. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்ப தொன்றுண்டு; பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச், சிறுமைபுறங் காத்து
யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

[மறவாமே. (இ. வி. 90.)]

---

193. புல்லாப் புன் கோட்டிப் புலவரிடைப் புக்குக்
கல்லாத சொல்லும்; கடைஎல்லாம் கற்ற
கடா அயினுஞ் சான்றவர் சொல்லார், பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

[கடை = கடையானவன். (இ. வி. 162.) எலாம் = எல்லாம். (இ. வி. 41.) விடுபாக்கு. (இ. வி. 86.) புக்கு. (இ. வி. 82. (6.) 86.)]

---

194. கற்றறிந்த நாவினார் சொல்லார் தஞ் சோர் வஞ்சி,
மற்றையர் ஆவார் பகர்வர்; பனையின் மேல்
வற்றிய ஓலை கலகலக்கும், எஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை ஒலி.

[பச்சோலை. (இ. வி. 121.) ஆவார். (இ. வி. 57.)]

---

## XXXIV. பாடம்.

---

### சீர்மை. (நாலடி.)

---

195. சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்
எக்காலுஞ் சொல்லார் மிகுதிச் சொல்; எக்காலும்
முந்திரி மேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
இந்திரனா எண்ணி விடும்.

[கீழ் = கீழானவன். (இ. வி. 162.) இந்திரனா = இந்திரனாக. (இ. வி. 140.)]

---

(பழமொழி.)

196. தமரேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமராத்தவே அகற்றலே வேண்டும்.
அமை யருமை வேம்ப! அணியவோ தம்மைத்
தமரேனுங் கொள்ளாக் கலம்

[தமர், தம. (இ. வி. 93.)]

---

(அறநெறிச்சாரம்.)

---

197. "பலகற்றோம் யாம்" என்று தற்புகழ வேண்டா;
அலர் கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்!
சில கற்றார் கண்ணும் உளவாம் பல கற்றார்க்
கச்சாணி அன்னதோர் சொல்.

[தன் = தன்னை. (இ. வி. 152. 35,) கண்ணும். (இ. வி. 63. 115.)]

---

(பழமொழி.)

---

198. மறுமனத்தான் இல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்தன் ஆகி, ஒழுகிற் செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப?
ஆயிரங் காக்கைக்கோர் கல்!

[தொக்கால். (இ. வி. 82. (6.) 88.)]

---

(நன்னெறி.)

---

199. அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பாற்
செறிபழியை அஞ்சார் சிறிதும்; பிறைநுதலாய்!
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோஇருளைக் கண்டு?

[அஞ்சல். (இ. வி. 157. 64.)]

---

200. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாமதிப்பர்; மின்னணிப்
பூணும் பிறவுறுப்பு, பொன்னே! அது புனையாக்
காணுங்கண் ஒக்குமோ? காண்!

[நன்ன. (இ. வி. 107.)]

---

## XXXV. பாடம்.

---

### கேள்வி. (தி. குறள்.)

---

201. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்; அச்செல்வஞ்
செல்வத்துள் எல்லாந் தலை.

---

202. இழுக்கல் உடைஉழி ஊற்றுக்கோல் அற்றே,
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

---

203. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்,
இழைத்துணர்ந் தீண்டிய கேள்வி யவர்.

---

204. நுணங்கிய கேள்வியர் அல்லார்,
வணங்கிய வாயினர் ஆதல் அரிது.

---

205. நன்றென்ற வற்றுள்ளும் நன்றே, முறைவருதன்
மூத்த இனையரைச் செறிவு.

---

206. [illegible] எஞ்ஞான்றுந் தக்கவை;
நயவற்க நன்றி பயவா வினை.

---

## XXXVI. பாடம்.

### தாளாண்மை. (நீதிநெறி.)

207. உறுதி பயப்ப கடைபோகா எனும்
இறுவரை காறு முயல்க; இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்றால்; அல்லனபோல்
ஆவனவும் உண்டு சில.

[ஆல் அசை. இற. (இ. வி. 153.)]

---

208. நலலா ரொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்,
அல்லன செய்தற் கொருப்படார்; பல்பொழிற்
செங்கட் புலியேற்றைப் பசித்தாற்; தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

[ஒழுக்கின்றலை=ஒழுக்கு, இன், தலை. (இ. வி. 63. 65.)]

---

209. சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறும் எனிற் றாழ்வரோ? தாழார்; அறனல்ல
எண்மைய ஆயினுங், கைவிட் டரிதெனினும்,
ஒண்மையிற் தீர்த்தொழுக லார்.

[எழுவாய்: ஒழுகலார். பயனிலை: தாழார். கைவிட்டு = கைவிடுவதற
எண்மைய=செய்தற்கு எளியவைகள். (எள்+மை+அ. இ. வி. 94. 93.)]

---

(நாலடி.)

---

210. ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிற்றணைக்கும் கந்தாகும்
வாழ்தலும் அன்ன தகைத்தே, ஒருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

[அதரிடை. (இ. வி. 63.)]

---

211\. உறுபுலி ஊன் இரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னும்; அறிவினாற்
காற்றொழில் என்று கருதற்க, கையினால்
மேற்றொழிலும் ஆங்கே மிகும்.

---

212\. ஈனமாய் இல்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ? யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.

---

## XXXVII. பாடம்.

---

### ஊக்கம். (தி,குறள்.)

---

213\. உடையர் எனப்படுவ தூக்கம்; அஃதில்லார்
உடைய துடையரோ, மற்று?

[எனப்படுவது = சொல்லுதற்குக் காரணம். உடையது. மற்று = வேறு டையது உடையவர் என்று சொல்லுதற்குக் காரணமோ?]

---

214\. உள்ள முடைமை உடைமை; பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.

---

215\. வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

---

[அனைய, அனையது. (இ. வி. 93.) மாந்தர்தம் = மனிதர்களுடைய.]

216\. உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

[உள்ளல். (இ. வி. 85.) நீர்த்து. (இ. வி. 93.)]

---

217. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்;
பெருமை முயற்சி தரும்.

218. தாளாண்மை என்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.

[தகைமைக்கண். (இ. வி. 63. 37.) தங்கிற்று=தங்கினது. (இ. வி. 83.)]

## XXXVIII. பாடம்.

### முயற்சி. (தி. குறள்.)

219. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

[விழையான் = விழையாதவன் ஆகி. (இ. வி. 143.)]

220. முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

[திருவினை. (இ. வி. 65.) புகுத்தி. (இ. வி. 103.)]

221. வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.

[உள்ளத்தின். (இ. வி. 137 = உள்ளத்தினால்.)]

222. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

223. உரமொருவற் குள்ள வெறுக்கை! அஃதில்லார்
மரமக்க ளாதலே வேறு.

224. ஊழையும் உப்பக்கங் காண்பர், உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

[உப்பக்கம். (இ. வி. 5.)]

---

## XXXIX. பாடம்.

---

### நல்வழி. (நீதிநெறி.)

---

225. மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே ஆகும்; எனைத் துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே,
மாசின் மனத்தின் அவர்.

---

226. மெய்யுணர்ந்தார் பொய்மேற் புலம்போக்கார், மெய்யுணர்ச்சி
கை வருதல் கண்ணும் புலன்களிப்பார்; மெய்யுணர்ந்தார்
காப்பே நிலையாப் பழி நாண நீள்கதவாச்
சேர்ப்பார், நிறைத்தாழ் செறித்து.

[காப்பே நிலையா காத்தலே கதவின் நிலையாகவும்.]

---

227. தன்னினைத்தா நெஞ்சங் கரியாகத் தானடங்கிற்
பின்னினைத்தான் எய்தாப் பயன் இல்லை; தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சினுக் குற்றேவல் செய்யிற்
பிடிபடுக்கப் பட்ட களிறு.

---

### (அறநெறிச்சாரம்.)

---

228. நின்னை அறப்பெறு கிற்றிலே னன்னெஞ்சே!
பின்னை யான் யாரைப் பெறுகிற்பேன்? நின்னை
அறப்பெறு கிற்பேனேல் பெற்றேன், மற் றீண்டு
துறக்கந் திறப்பயிற்றார் தான்.

[பெறுகிற்கிலேன். இஃது, கு, சரியையவன். (இ. வி. 108, 99.)]

---

229. உள்ளூர் இருந்தக்கால் உள்ளம் அறப் பெற்றோரே,
கன்னியுஞ் சோலையும் காட்டினார்; காட்டினரும்
உள்ளம் அறப்பெறு கல்லாரே நாட்டினரு
தன்னி நடுவர் உளர்.

---

(அவ்வை.)

---

230. ஈதல் அறந்; தீவினைவிட் டீட்டல் பொருள்; எஞ்ஞான்றுங்
காதல் இருவர் கருத்தொருமித் தாதரவு
பட்டதே இன்பம்; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

---

## XL. பாடம்.

---

### அறம். (தி. குறள்.)

---

231. சிறப்பீனுஞ் செல்வமும் ஈனும்; அறத்தினூஉங்
காக்கம் எவனோ, உயிர்க்கு?

[எவன் = எது. அறத்தினூஉங்கு = அறத்தின் ஊங்கு. (இ. வி. 153. 61. 14.)]

---

232. அறத்தினூஉங் காக்கமும் இல்லை; அதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

[அதனை = அது + அன் + ஐ. (இ. வி. 71. 108.)]

---

233. ஒல்லும் வகையால் அறவினை, ஓவாதே,
செல்லும்வாய் எல்லாஞ் செயல்.

[செயல், (இ. வி. 85.) அறவினை. (இ. வி. 33. 121. 154.)]

---

234. மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

[மனத்துக்கண் (மனம், அத்து, கண்) (இ. வி. 63. 66. ஆதல். (இ. வி. 85.) நீர=தன்மையையுடையன. (இ. வி. 93.)]

---

235. அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்.

[அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல். (இ. வி. 56.) நான்கும். (இ. வி. 113.) இழுக்கா. (இ. வி. 86. (1.))]

---

236. அறத்தான் வருவதே இன்பம்; மற் றெல்லாம்
புறத்த, புகழும் இல.

---

## XLI. பாடம்.

---

### அடக்கம். (மூதுரை.)

---

237. அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா; மடைத்தலையில்
ஓடுமீன் ஓட ஒருமீன் வரும் அளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

---

(நாலடி.)

---

238. நளிகடற் றண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்
கொளிகலம் ஆவதடக்கம்; பணிவில்சீர்
மாத்திரை இன்றி நடக்குமேல் வாழும் ஊர்
கோத்திரங் கூறப் படும்.

[சீர் = [illegible] (இ. வி. 152. 162.)]

---

(பழமொழி.)

239. கற்றறிவார் கண்ட அடக்கம் அடங்காதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார்; தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட!
நிறைகுட் நீர்தளும்பல் இல்.

[நீர் = நீருக்கு. (இ. வி. 152.)]

240. கோவாத சொல்லுங் குணன் இல்லா மாக்களை
நாவாய் அடக்கல் அரிதாகும்; நாவாய்
களிகன்போற் றூக்குங் கடற்சேர்ப்ப! வாங்கி
வளிதோட் இவ்வாரோ? இல்.

241. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்தன் ஆகி நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல், குரங்கின் கைக்
கொள்ளி கொடுத்து விடல்

[எழுவாய்: வைத்தல். பயனிலை: விடல்.]

242. எண்ணக் குறைபடாச் செல்வமும், இற்பிறப்பும்,
மன்ன ருடைய உடைமையும், மன்னரால்
இன்னர் எனல்வேண்டா; இம்மைக்கும் உம்மைக்குந்
தம்மை உடைமை தலை.

## XLII. பாடம்.

### அடக்கம் (தி. குறள்.)

243. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

[ஆர் இருள். (இ. வி. 153. 132.)]

244. காக்க, பொருளா, அடக்கத்தை; ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு.

[காக்க. (இ. வி. 85.)]

---

245. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

[அடங்கியான் = அடங்கினவன்.]

---

246. எல்லார்க்கு நன்றாம் பணிதல், அவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

---

247. யாகாவா ராயினு நாகாக்க; காவாக்காற்
சோகாப்பர், சொல்லிழுக்குப் பட்டு.

[காக்க. (இ. வி. 140. (3.))]

---

248. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

---

## XLIII. பாடம்.

---

### பிறர்க்குதவி. (நன்னெறி.)

---

249. எந்தைநல் கூர்த்தான் இரப்பார்க்கீந் தெஞ்சியவை
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ? பைந்தொடீ!
நின்று பயனுதவி, நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி.

[பைந்தொடீ = பசும்பொன்னாலாகிய வளையல்களையுடையவளே! (இ. வி. 121; 162, 64.)]

---

250. பெரியவர்த் தோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க; தெரிஇழாய்!
மன்ற பிணியால் வருந்து பிறஉறுப்பைக்
கண்ணே கலுழுமே கண்.

[இழுதாவர் = இழுதைப்போல் ஆவார். (இ. வி. 155.) இழாய் = இழையையுடையவளே! (இ. வி. 93. 162.) வருந்து = வருந்தும். (இ. வி. 143.)]

---

(நாலடி.)

---

251. முன்னரே சாநாள்; முனிதக்க மூப்புள
பின்னரும்; பீடழிக்கு நோய் உள; கொன்னே
பரவன் மின்! பற்றன்மின்! பாத் துண்மின்! யாதும்
கரவன்மின்! கைத்துண்டாம் போழ்து.

[பாத்து = பகுத்து. (இ. வி. 41.) சாநாள். (இ. வி. 153.)]

---

252. மறுமையும், இம்மைப் நோக்கி ஒருவற்
குறுமா றியைவ கொடுத்தல், வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும்.

[இயைவ = இயைபவை.]

---

253. நடு வூருள் வேதிகைச் சுற்றுக்கோட் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றுப் பனை.

---

254. பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்
செயற்பால செய்யா விடினும்; கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண் சேர்ப்ப!
என்னை உலகுய்யும் ஆறு.

[பெயற்பால் மழை = பெய்யத்தக்க மழை.]

---

## XLIV. பாடம்.

ஈகை. (நாலடி.)

255. ஏற்றகை மாற்றாமை என்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன், ஆற்றின்,
மலிகடற் றண்சேர்ப்ப! மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

256. இரப்பச் சிறிதென்று இல்லென்னன் மின்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க; முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

(நாலடியார்.)

257. நட்டார்க்கு நல்லா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்; அட்ட
தடைத்திருந் துண்டொழுகும் ஆவதின் மாக்கட்
கடைக்கும் ஆம் ஆண்டைக் கதவு.

[அடைக்கும்=அடைக்கப்படும் ஆவதின் மாக்கட்கு=ஆவது, இல், மக்களுக்கு=ஆக்கம் இல்லாத மனிதருக்கு. ஆம், அசைநிலை.]

258. எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்,
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்;
மறுமை அறியாதார் ஆக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

[ஆக்கத்தின்=ஆக்கத்திலும்.]

(பழமொழி.)

259. எனைத்தென றெனிருக்கும் ஏழை பொருளை
எனைத்தென றெனிருப்பன் ; யானுந் தனதாயின்
ஒன்றும் அதனை வழங்கான், பயன்றுய்வான்
யானும் அதனை அது.

[அது=அப்படியே வழங்கேன்.]

260. அருமை உடைய பொருளுடையார் தங்கண்
கருமம் உடையாரை நாடார் எருமைமேல்
நாரை துயில்வதியும் ஊர! குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றார் இல்.

## XLV. பாடம்.

### பிறர் உபகாரம். (திருக்குறள்.)

261. கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு?

[மாரிமாட்டு. (இ. வி. 63. 68.)]

262. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

263. ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் ; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

[படும். (இ. வி. 137.)]

264. ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

[அவாம் = அவாவும். (இ. வி. 87. (3.))]

265. பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

[நயனுடையான்கண். (இ. வி. 63.) ஆல், அசைச்சொல்.]

---

266. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

---

## XLVI. பாடம்.

---

### பிறர் உபகாரம்.

---

267. இடனில் பருவத்தும், ஒப்புரவிற் கொல்கார்
கடன்அறி காட்சி யவர்.

[இடன் = இடம். (இ. வி. 17.) கடன் அறி காட்சியவர் = தாஞ்செய்யத் தக்கவைகளை அறிந்த இயற்கை அறிவை உடையவர்.]

---

268. ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

[கோட்டக்கது = கொள்ளத்தக்கது. கோள் = கொள்ளுதல்.]

---

269. வறியார்க்கொன் றீவதே ஈகை; மற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

[குறி = குறிக்கப்பட்ட. (இ. வி. 153.) எதிர்ப்பை = நோக்கத்தை.]

---

270. நல்லா றெனினுங் கொளறீது; மேல் உலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

---

271. ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின்.

---

272. அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

[தீர்த்தல் (இ. வி. 85.) வைப்புழி = வைக்கும் இடம். (வைப்பு+உழி.)]

---

## XLVII. பாடம்.

---

### சினம். (மூதுரை.)

---

273. கற்பிளவோ டொப்பர் கயவர்; கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே; விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப் போல, மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

[கடும். (இ. வி. 121.) மகரந் தோன்றியது. போல்வாரே = தமையாயி னோர்.]

---

274. உள்ளம் கவர்ந்தெழுந் தோங்கு சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணம் என்க! வெள்ளந்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ? விளம்பு.

[ஓங்கு = ஓங்கும். (இ. வி. 153.) என்க. (இ. வி. 85.)]

---

275. முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்; நனிவிளைவிற்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்
தாயினும் ஆமோ? அறை.

[முனிவினும். (இ. வி. 113. (7.)) நல்குவர். (இ. வி. 8.) மூதறிஞர். (இ. வி. 119. 93.) பழுத்தாயினும். (இ. வி. 141.)]

---

(நாலடியார்.)

---

276. மதித்திறப் பாரும் இறக்க மதியார்
மிதித்திறப் பாரும் இறக்க; மிதித்தேறி
ஈயுந் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

---

277. காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால், ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார் எஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

---

278. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர், ஓர்த்ததனை
உள்ளத்தான் உள்ளி உரைத்தூராய் ஊர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

[ஓர்த்து. (இ. வி. 41 = ஓர்ந்து.) நேர்த்து = நேர்ந்து. (இ. வி. 41.) உராய் = உராவி.]

---

## XLVIII. பாடம்.

---

### பொறை. (நாலடி.)

---

279. இளையான் அடக்கம் அடக்கம்; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்; எல்லாம்
ஒறுக்கு மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

---

280. கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்; ஒல்லை
இடுநீற்றுற் பைஅவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

---

281. மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை என்றார் அறிவுடையார்; ஆற்றாமை
நேர்த்துநின்று மற்றவர் செய்தக்காற் றாம்அவரைப்
பேர்த்துநின்று செய்யாமை நன்று.

[தம்மாறு = ஏற்பார்க்கு தங்களின்பேரில் பகை கொண்டவர்களுக்கு.]

---

282. நெடுங் காலம் ஓடினு நீசர் வெகுளி
கெடுங் காலம் இன்றிப் பரக்கும்; அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம் போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

---

283. உபகாரஞ் செய்ததனை ஓராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செயினும், உபகாரந்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினாற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

[எழுவாய்: ஊக்கல். பயனிலை: இல்.]

---

284. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம் வாயாற்
பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை; நீர்த்தன்றிக்
கீழ் மக்கள் கீழாய சொல்லியக் காற் சொல்பவோ,
மேன்மக்க டம் வாயான் மீட்டு?

[நீர்த்து = நீர்மையுள்ளது. (இ. வி. 93.) கீழாய = கீழ்மை யுள்ளவைகளை. (இ. வி. 93, 87.)]

---

(அறநெறிச்சாரம்.)

---

285. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே; காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும், உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

---

## XLIX. பாடம்.

---

### சினமின்மை. (தி. குறள்.)

---

286. செல்லிடத்துக் காப்பான், சினங்காப்பான்,
அல்லிடத்துக் காக்கின்என்? காவாக்கால் என்?

[காப்பான்=காப்பவன். (இ. வி 95.) செல், அல். (இ. வி 153.)]

---

287. மறத்தல் வெகுளியை; யார்மாட்டுந் தீய
பிறத்தல் அதனான் வரும்.

---

288. நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையும் உளவோ பிற?

---

289. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க! காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

---

290. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும் ஏமப் புணையைச் சுடும்.

[கொல்லி. (இ. வி. 96.)]

---

291. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

---

## L. பாடம்.

---

### பொறுமை. (நாலடி.)

---

292. கோதை அருவிக் குளிர்வரை நன்னாட!
பேதையோ டியாதும் உரையற்க; பேதை
உரைப்பிற் சிதைந்துரைக்கும்; ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

[பேதையோடியாதும். (இ. வி. 24.)]

---

293. காதலார் சொல்லுங் கடுஞ்சொல் உவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலிற் றீதாமோ? போதெலா
மாதர்வண் டார்க்கு, மலிகடற் றண்சேர்ப்ப!
ஆவ தறிவார்ப் பெறின்.

---

294. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க! பொறான் ஆயின்
தூற்றாதே தூர விடல்.

---

295. இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவின், அல்லது துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது.

[நோவின் அல்லது = நோவதல்லாமல்.]

---

296. இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க! இன்பம்
ஒழியாமை கண்டாலும், ஓங்கருவி நாட!
பழிஆகா ஆறே தலை.

---

297. தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க; தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க; வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்!

---

## LI. பாடம்.

---

### பொறுமை: (தி. குறள்.)

---

298. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத், தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

[பொறுத்தறலை = பொறுத்தல் தலை. (இ. வி. 38.)]

---

299. பொறுத்தல் இறப்பினை என்றும்; அதனை
மறத்தல் அதனினும் நன்று

---

300. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே, வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

---

301. ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.

---

302. திறன்அல்ல தற் பிறர் செய்யினு நோநொந்
தறன்அல்ல செய்யாமை நன்று.

[தற் = தன்னிடத்தில். (இ. வி. 152. 35.)]

---

303. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந் தந்
தகுதியான் வென்று விடல்.

---

## LII. பாடம்.

---

### காமம். (நீதிநெறி.)

---

304. கொலைஅஞ்சார், பொய் நாணார், மானமும் ஓம்பார்
களவொன்றோ ஏனையவுஞ் செய்வார், பழியொடு
பாவம் இஃ தென்னார், பிறிதுமற் றென் செய்யார்
காமங் கதுவப்பட் டார்.

---

305. சிற்றின்பஞ் சின்னீர தாயினும், அஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப; முற்றுந் தாம்
பேரின்ப மாக் கடல் ஆடுவார் வீழ்பவோ
பார் இன்பப் பாழ்ங் கும்பி யில்?

[சிற், சின், பேர். (இ. வி. 121.)]

---

### (நாலடி.)

---

306. "தெண்ணீர்க் குவளை," "பொருகயல்" "வேல்," என்று
கணணில்புன் மாக்கள் கவற்ற, விடுவேனோ?
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

[தெண்ணீர் = தெள், நீர் உண்ணீர் = உள்நீர். (இ. வி. 39.)]

---

307. முல்லை முகைமுறுவல் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ?
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

---

308. பண்டம் அறியார், படு சாந்துங் கோதையுங்
கொண்டுபா ராட்டுவார், கண்டிலர்கொல், மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச்சாகா ட்டச்சிற் றுழி.

---

309. கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி, ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மின், இற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து?

[கண்ணவாய்=கண்களையுடையன ஆகி. (இ.வி. 93, 86.) சால. (இ.வி. 120.)]

---

## LIII. பாடம்.

---

### தருமம். (நாலடி.)

---

310. தம்முடை ஆற்றலும் மானமுந் தோற்றுத்தம்
இன்னுயிர் ஓம்பினு மோம்புக, பின்னர்ச்
சிறுவரை ஆயினு மன்ற தமக்காங்
இறுவரை இல்லை எனின்.

[தம்முடை = தம்முடைய. (இ. வி. 41.)]

---

311. ஆவாதாம் ஆக்க நன்றூ அறமற்று
போவாதாம் என்னாப், புலைநெஞ்சே, ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி எனினும் நின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை!

[வாழ்தி = வாழ்வாய். (இ. வி. 83.)]

---

312. இன்று கொல், அன்று கொல், என்று கொல், என்னாது
பின்றையே நின்றது கூற்றம், என் றெண்ணி,
ஒருவுமின் தீயவை, ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்.

---

313. உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங் கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

[உறக்கும் = உறங்கும். (இ. வி. 41.)]

---

314. வைகலும் வைகல் வரக் கண்டும் அஃதுணரார்;
வைகலும் வைகலை வைகும், என் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

[எழுவாய்: உணராதார். பயனிலை: இன்புறுவர்.]

---

315. மான அருங்கல் நீக்கி, இர வென்னும்
ஈன இளிவினால் வாழ்வேன், மன், ஈனத்தால்
ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கும் எனின்.

[மான அருங்கலம் = மானம் என்கிற பெறற்கரிய அணி.]

---

## LIV. பாடம்.

ஒழுக்கம். (தி. குறள்.)

316. ஒழுக்கம் விழுப்பந் தரலான்,
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்.

317. பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந்
தெரிந்தோம்பித் தேரினும், அஃதே துணை.

318. அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

319. நன்றிக்கு வித்தாந் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

320. உலகத்தோ டொட்ட ஒழுகல்,
பல கற்றும், கல்லார் அறிவிலா தார்.

## LV. பாடம்.

புறங்கூறுமை. (நீதிநெறி.)

321. பகை இன்று பல்லார் பழி எடுத் தோதி
நகை ஒன்றே தன் பயனுக் கொள்வான், பயம் இன்று
மெய் விதிர்ப்புக் காண்பான் கொடிற்றுடைத்துக் கொல் வான்
கை விதிர்த் தஞ்சப் படும். [போற்

[அஞ்சப்படும் = அஞ்சப்படுவான். (இ. வி. 137.) இன்று = இன்றி. காண்பான் = காணும்பொருட்டு.]

(நாலடி.)

---

322. கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்கம் இலாதவர், தூய மனத்தார்,
விளக்கினுள் ஒண் சுடரே போன்று.

[எழுவாய்: மனத்தார். பயனிலை: துளக்கம் இலாதவர்.]

---

323. கணமலை நன்னாட! கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற் குணனழுங்கக்
குற்றம் உழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றால் இயன்றதோ நா.

[குணன் குணம். (இ. வி. 17.)]

---

(பழமொழி.)

---

324. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதை தன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்; நல்லாய்!
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும்.

---

(நன்னெறி.)

---

325. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே; வண்டு மலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும் பொழில்வாய்; வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி.

[கீழ். (இ. வி. 162.) வாய். (இ. வி. 63.) கனி. (இ. வி. 131.)]

---

## LVI. பாடம்.

### புறங்கூறாமை. (தி. குறள்.)

326. அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது.

327. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

328. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

329. அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை
புறஞ்சொல்லும் புன்மையாற் காணப் படும்.

[தருமம் நன்றென்று சொல்லுவனுடைய மனதில் தருமம் இல்லை என்பது.]

330. பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

331. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
றீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

## LVII. பாடம்.

### மெய்ம்மை. (நாலடி.)

332. இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று; வையத் தியற்கை; நசைஅழுங்க
நின்றோடிப் பொய்த்தல், நிரைதொடீஇச் செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றம் உடைத்து.

333. கால் ஆடு போழ்திற் கழி கிளைஞர் வானத்து
மேல் ஆடு மீனிற் பலர் ஆவர்; ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால் ஈர்ங் குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்.

[கால் ஆடு போழ்தில் = முயற்சியாற் செல்வம் உண்டான காலம். ஈர்ங் = ஈரம் = ஈரபாகத்தை உடைய. (இ. வி. 41.)]

---

334. நல்லாவின் கன்றாயின் நாகும் விலை பெறூஉம்;
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவே போன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந் தார் சொல்.

---

335. இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்; தடங் கண்ணாய்
உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்
கைப்பறா பேய்ச் சுரையின் காய்.

---

336. ஆவே றுருவின ஆயினும் ஆ பயந்த
பால்வே றுருவின அல்லவாம்; பால் போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி; ஆ போல்
உருவு பலகொளல் ஈங்கு.

[கொளல் = கொண்டிருக்கும்.]

---

337. தாஞ்செய் வினைஅல்லாற் றம்மொடு செல்வது மற்
றியாங் கணுந் தேரிற், பிறிதில்லை; ஆங்குத் தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

---

## LVIII. பாடம்.

---

### வாய்மை. (தி. குறள்.)

---

338. தன் னெஞ் சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
றன் னெஞ்சே தன்னைச் சுடும்.

---

339. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

---

340. மனத்தொடு வாய்மை மொழியிற்
றவத்தொடு தானஞ்செய் வாரிற் றலை.

---

341. புறந் தூய்மை நீரான் அமையும்; அகந் தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

---

342. எல்லா விளக்கும் விளக்கல்ல; சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

---

343. யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.

---

## LIX. பாடம்.

---

### மெய்யுணர்வு. (தி. குறள்.)

---

344. இருணீங்கி இன்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

---

345. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு
வையத்தின் வான நணிய துடைத்து

---

346. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

---

347. சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

[இடத்தால். (இ. வி. 137.)]

---

348. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.

---

## LX. பாடம்.

---

### அறிவு. (தி. குறள்.)

---

349. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

---

350. எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு

[எவ்வது, அவ்வது. (இ. வி. 56.)]

---

351. அறிவுடையார் ஆவ தறிவார்;
அறிவிலார் அஃதறி கல்லா தவர்.

[அறிகல்லாதவர் அறி, கு, அல்லாதவர். (இ. வி. 108.) ஆவது. (இ. வி. 95.)]

---

352. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவ
தஞ்சல் அறிவார் தொழில்.

---

353. அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடையர் ஏனும் இலர்.

---

354. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

---

## LXI. பாடம்.

---

### அறிவின்மை. (நாலடி.)

---

355. பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

---

356. பாலாற் கழீஇப் பலநாள் உணக்கினும்
வாலிதாம் பக்கம் இருந்தைக் கிருந்தன்று;
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா உடம்பிற் கறிவு.

[கழீஇ, கடாஅய். (இ. வி. 79. 86.) குறினும் = கூறினும். (இ. வி. 41) வாலிதாம் = வால், இது, ஆம் = வெள்ளிதாகிய. (இ. வி. 93. 87.) (3.)]

---

357. பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉம் ஈப்போல், இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு?

---

358. கற்றார் உரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ் சுதைத்தலான் மற்றும்ஓர்
தன்போல் ஒருவன் முகநோக்கித் தானும் ஓர்
புன்கோட்டி கொள்ளும் ஆங் கீழ்.

[ஆல், ஓர், அசைநிலைகள்.]

---

359. கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு, மெல்ல,
இருப்பினும் நாய் இருந் தற்றே, இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று.

---

(பழமொழி.)

---

360. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல், மிக்க
இனநலம் நன்குடைய ஆயினும் என்றும்
மனநலம் ஆகாவாங் கீழ்.

---

## LXII. பாடம்.

---

### நன்றியில் செல்வம். (நாலடி.)

---

361. அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்,
பொரிதாள் விளவினை வாவல் குறுகா;
பெரிதணியர் ஆயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

362. அள்ளிக்கொள் வன்ன குறுமுகை யாயினுங்
கள்ளிமேற் கைநீட்டார், சூடும்பூ அன்மையால்;
செல்வம் பெரிதுடையர் ஆயினுங் கீழ்களை
நள்ளார் அறிவுடை யார்.

---

363. மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்;
செல்வம் பெரிதுடையர் ஆயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

[திரைய = திரையையுடைய.]

---

364. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே!
உணர்வ துடையார் இருப்ப, உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே,
பட்டுந் துகிலும் உடுத்து.

---

365. பொன்னிறைச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்;
வெண்மை உடையார் விழுச் செல்வம் எய்தியக்கால்
வண்மையும் அன்ன தகைத்து.

---

366. ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும்; யாதுங்
கொடாஅர் எனினும், உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

---

## LXIII. பாடம்.

### தெரிந்து செயல் வகை.

367. அழிவதூஉம், ஆவதூஉம் ஆகி
வழிபயக்கும் ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.

368. ஆக்கங் கருதி, முதல் இழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.

---

369. செய்தக்க அல்ல செயக்கெடும்;
செய்தக்க செய்யாமை யானுங் கெடும்.

---

[கெடும் = கெடுவோன். (இ. வி. 137.)]

370. எண்ணித் துணிக கருமந்! துணிந்த பின்!
எண்ணுவம் என்ப திழுக்கு.

---

371. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவர்அவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

---

372. எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந்: தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

---

## LXIV. பாடம்.

---

### வலி அறிதல்.

---

373. வினைவலியுந் தன் வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

---

374. அமைந்தாங் கொழுகான் அளவறியான், தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

---

375. பீலிபெய் சாகாடும் அச்சிறும், அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

---

376. நுனிக்கொம்பர் ஏறினர் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.

[கொம்பர். (இ. வி. 17.)]

---

377. ஆற்றின் அளவறிந் தீக! அதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

---

378. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

---

## LXV. பாடம்.

---

### பேதைமை.

---

379. பேதைமை என்பதொன் றியாதெனின், ஏதங் கொண்
டூதியம் போக விடல்.

---

380. பேதைமையுள் எல்லாம் பேதைமை, காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

[கையல்ல தன் கண் = கை, அல்லது, அன், கண். (இ. வி. 93. 123. 63.)]

---

381. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

---

382. ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும், தான்அடங்காப்
பேதையிற் பேதையார் இல்.

---

383. ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர்,
பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை.

---

384. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற், சான்றோர்
குழாஅத்துப் பேதை புகல்.

[கழாஅ = கழுவாத. (இ. வி. 41. 91.) ஆல், அசை. குழாஅத்து, குழாம், அத்து. (இ. வி. 41. 66. 152.)]

---

## LXVI. பாடம்.

---

### பயனில்லாத சொல்.

---

385. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

[எல்லாரும் = எல்லாராலும். (இ. வி. 152.) எள்ளப்படும். (இ. வி. 137.)]

---

386. பயனில் சொற் பாராட்டு வானை மகனெனல்!
மக்கட் பதடி எனல்.

[எனல் (இ. வி. 92.) எனல். (இ. வி. 85.)]

---

387. நயனில சொல்லினுஞ் சொல்லுக; சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

---

388. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

389. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார்,
மருடீர்ந்த மாசறு காட்சி யவர்.

---

390. அறைபறை அன்னர் கயவர், தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

---

## LXVII. பாடம்.

---

### பொறாமை.

---

391. அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

[வேண்டாதான் என்பான் = வேண்டாதவன் என்று சொல்லப்படுபவன். அறன் ஆக்கம். (இ. வி. 156.)]

---

392. அழுக்கா றுடையார்க் கதுசாலும்; ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

---

393. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம்
உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

---

394. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ்
செவ்வியான் கேடும் நினைக்கப் படும்.

---

395. அரம்பொருத பொன்போலத் தேயும்
உரம்பொரு துட்பகை உற்ற குடி.

396. உடுப்பதூஉம் உண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

[வற்று = வல் + து. (இ. வி. 93.) ஆகும். (இ. வி. 137.) கீழ். (இ. வி. 163.)]

---

## LXVIII. பாடம்.

---

### விருந்தோம்பல். (அறநெறிச்சாரம்.)

---

397. விருந்து புறந்தரான், வேளாண்மை செய்யான்
பெருந் தக்கவரையும் பேணான், பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகும்ஏல்,
இல்வாழ்க்கை என்ப இருள்.

[தரான், செய்யான், பேணான், கல்லான். இவை எதிர்மறைப் பெயரெச்சத்தால் உண்டாகும் வினைப்பெயர்கள். (இ. வி. 95. = தராதவன், செய்யாதவன், பேணாதவன், கல்லாதவன்.) ஒழுகும் = ஒழுகுவான். (இ. வி. 137.)]

---

398. அட்டுண்டு வாழ்வார்க் கதிதிகள் எஞ்ஞான்றும்
அட்டுண்ணா மாட்சி உடையவர்; அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வார் அதிதிகள் என்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை.

---

(தி. குறள்.)

---

399. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

[வரு = வரும்.]

---

400. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை; மடவார்கண் உண்டு.

401. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

[மோப்ப. (இ. வி. 86.)]

## LXIX. பாடம்.

### தீவினை.

402. தீயவை தீய பயத்தலாற் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

[தீயவை, தீய. (இ. வி. 93.)]

403. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

404. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

[தீப்பால=தீமைக்கூறுடைய வினைகள்.]

405. எனைப்பகை உற்றாரும் உய்வர்;
வினைப்பகை வீயாது பின்சென் றடும்.

406. தீயவை செய்தார் கெடுதல் நிழற்றன்னை
வீயா தடிஉறைந் தற்று.

407. தன்னைத்தான் காதலன் ஆயின், எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

## LXX. பாடம்.

### கூடா ஒழுக்கம். (தி. குறள்.)

408. வான்உயர் தோற்றம் எவன்செய்யுந் தன்னெஞ்சந்
தான்அறி குற்றப் படின்?

409. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

[வலியினிலைமையான் = வல்லமை இல்லாத இயல்புடையான்.]

410. தவமறைந் தல்லவை செய்தல்,
புதன்மறைந்து வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

[தவம் = தவவேடத்திலே. (இ. வி. 162.)]

411. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல்
வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல்.

412. மனத்தது மாசாக, மாண்டார்நீர் ஆடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

[மாண்டார் = மாட்சிமையுள்ளவர்களாக.]

413. மழித்தலு நீட்டலும் வேண்டா, உலகம்
பழித்த தொழித்து விடின்.

## LXXI. பாடம்.

### இன்னாசெய்யாமை. (தி. குறள்)

414. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

415. இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

416. அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

417. இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

418. எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை.

419. தன்னுயிர்க் கின்னாமை தான்அறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்?

## LXXII. பாடம்.

### தாளாண்மை. (நாலடி.)

420. நற்கரும் பீன்ற திரள்கால் உளைஅலரி
தேன்கமழ் நாற்றம் இழந்தாஅங் கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னாம், பெயர்பொறிக்கும்
பேராண்மை இல்லாக் கடை?

[நற்கரும்பீன்ற பூ: இனிய கரும்பு ஈனப்பட்ட திரண்ட தாளையும் மயிரைப் போன்ற உளையையும் உடைய பூ இனிதாக மணங்கமழுகிற வாசனையை இழந்தாற்போல. (இ. வி. 152—7.)]

421. பெருமுத்த ரையர் பெரிதுவந் தீயும்
கருணைச்சோ றார்வர் கயவர்; கருணையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்

[கருணைச் சோறு (இ. வி. 156.)]

---

422. இசையா தெனினும் இயற்றிஓ ராற்றால்
அசையாது நிற்பதாம் ஆண்மை! இசையுங்கால்
கண்டல் திரை அலைக்கும் கானலந் தண்சேர்ப்ப!
பெண்டிரும் வாழாரோ மற்று!

---

423. வயாவும், வருத்தமும், ஈன்றக்கா னோவும்,
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தான் உற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

[கவான் = தொடையினிடத்தில். அசா = தளர்ச்சியால். (இ. வி. 152)
உசா = சூழ்ச்சியையுடைய. (இ. வி. 152.)]

---

424. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லா
நிழன்மரம்போ னேர்ஒப்பத் தாங்கிப் பழுமரம்போற்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

---

425. அடுக்கன் மலைநாட! தற்சேர்ந் தவரை
எடுக்கலம் என்னார் பெரியோர் அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

[எடுக்கலம் = எடுக்கமாட்டோம். (தெ, கு, அலம். இ. வி. 93, 108 135.)
பொறுக்கலா = பொறுக்கமாட்டாத.]

---

## LXXIII. பாடம்.

### சிற்றினஞ் சேராமை. (தி. குறள்.)

426. சிற்றினம் அஞ்சும் பெருமை; சிறுமைதான்
சுற்றமாய்ச் சூழ்ந்து விடும்.

[பெருமை. (இ. வி. 162.)]

427. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு.

428. மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி; இனத்தானாம்
இன்னான் எனப் படுஞ் சொல்.

429. மனத்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனத்தூய்மை தூவா வரும்.

430. மனநல் மன்னுயிர்க் காக்கம்;
இனநலம் எல்லாப் புகழுந் தரும்.

431. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

## LXXIV. பாடம்.

### சுற்றத்தார். (தி. குறள்.)

432. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.

433. விருப்பறாச் சுற்றம் இயையின்
அருப்பறா ஆக்கம் பலவுந் தரும்.

---

434. அளவளா வில்லாதான் வாழ்க்கை,
குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று.

---

435. சுற்றத்தாற் சுற்றப் படஒழுகல், செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.
[பெற்றத்தால் = பெற்றதால். (இ. வி. 41.)]

---

436. பெருங்கொடையான் பேணான் வெகுளி, அவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

---

437. காக்கை கரவா கரைந்துண்ணும்;
ஆக்கமும் அன்னநீ ரார்க்கே உள.

---

## LXXV. பாடம்.

---

களவு. (தி. குறள்.)

---

438. உள்ளத்தால் உள்ளலுந் தீதே, பிறன் பொருளைக்
கள்ளத்தாற் கள்வேம் எனல்.

---

439. களவினால் ஆகிய ஆக்கம்
அளவிறந் தாவது போலக் கெடும்.

---

440. எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்க; தன் னெஞ்சு.
[கள்ளாமை = களவாமல். காக்க. (இ. வி. 88.)]

441. களவென்னும் காரறி வாண்மை
அளவென்னும் ஆற்றல் புரிந்தார்கண் இல்.

---

442. களவின்கட் கன்றிய காதல்
விளைவின்கண் வீயா விழுமந் தரும்.

---

443. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

---

## LXXVI. பாடம்.

---

### சூது. (தி. குறள்.)

---

444. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை; வென்றதூஉம்
தூண்டிற் பொன் மீன்விழுங்கி யற்று.

---

445. ஒன்றெய்தி, நூறிழக்குஞ் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு?

---

446. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

---

447. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

---

448. உடைசெல்வம் ஊண்ஒளி கல்வியென் றைந்தும்
அடையாவாம் ஆயம் கொளின்

---

449. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ,
அருள்கெடுத் தல்லல் உழப்பிக்குஞ் சூது.

## LXXVII. பாடம்.

### கள்ளுண்ணாமை. (தி. குறள்.)

450. உட்கப் படாஅர், ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்
கட் காதல் கொண்டொழுகு வார்.

[கட்காதல்கொண்டு = கள்ளின் மேல் ஆசை கொண்டு (இ. வி. 152. 84.)]

451. உண்ணற்க கள்ளை, உணில்உண்க சான்றோரால்
எண்ணப் படவேண்டா தார்.

452. நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

453. துஞ்சினார் செத்தாரின் வேறல்லர், எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

454. களித்தறியேன் என்பது கைவிடுக, நெஞ்சத்
தொளித்ததூஉம் ஆங்கே மிகும்.

455. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.

[தீத்துரீஇயற்று = விளக்கினால் தேடுதலை ஒக்கும். (இ. வி. 152. 79.)]

## LXXVIII. பாடம்.

### மறதி. (தி. குறள்.)

456. இறந்த வெகுளியின் தீதே சிறந்த
உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

457. பொச்சாப்புக் கொல்லும் புகழை; அறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

458. அச்சம் உடையார்க் கரணில்லை; ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

459. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

[பின்னூறு இரங்கிவிடும் = இடையூறு உண்டான காலத்தில் தன் பிழையை நினைந்து இரங்கி விடுவான்.]

460. அரியஎன் றாகாத இல்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்.

461. உள்ளிய தெய்தல் எளிது, மன், மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்

## LXXIX. பாடம்.

### கரவு. (மூதுரை.)

462. நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்;
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு: நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர், கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

[உறையும். (இ. வி. 140.)]

(நீதிநெறி.)

---

463. செயக்கடவ அல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிகம் என்னாம்? செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோம் என்று, தலைதுமிப்பான் றன்னனிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

[கடவ. (இ. வி. 125. 93.) செய்தும்=செய்வோம். (இ. வி. 83.)]

---

464. தீய செயற்செய்வார் ஆக்கம் பெருகினுந்
தீயன' தீயனவே வேறல்ல; தீயன
நல்லன ஆகாவாம்; நாயின் புறத்தமிக்
சொல்லுஞ் சுவையமாப் போல்.

---

465. வஞ்சித் தொழுங் மதியிலிகாள்? யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்! வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

[காணும். (இ. வி. 137.)]

---

(தி. குறள்.)

---

466. வாள்போற் பகைவரை அஞ்சற்க! அஞ்சுக
கேள்போற் பகைவர் தொடர்பு!

---

467. எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு.

[எட்பகவன்ன=எள்ளின் பிளவைப்போன்ற.]

---

## LXXX. பாடம்.

---

### மேன்மக்கள். (மூதுரை.)

---

468. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவல்ல
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்,
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

[இது சவலை வெண்பா. (இ. வி. 188.) அட்டாலும். (இ. வி. 142.) அள வல்ல=அளவில்லாமல்.)]

---

469. சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே;
அல்லாதார் கெட்டால் அங் கென்னாகும்? சீரிய
பொன்னின் குடம் உடைந்தாற் பொன்னாகும்; என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்.

[பொன்னின்=(இ. வி. 66.)]

---

### (நன்னெறி.)

---

470. உடற்கு வரும் இடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கும் ஒருகோடி ஆக நடுக்கம் உறார்,
பண்ணிற் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்?

[ஆக என்பதின் பின் இருந்தாலும் என்பதைக் காட்டி உணர்க. எழுவாய்: உற்றோர். பயனிலை: உறார். பண்ணின் = பண்ணைப்போல. (இ. வி. 61.) மதிமான். (இ. வி. 157.) பனிமொழியாய். (இ. வி. 155. 93.)]

---

471. தந்நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளாற்றி எய்த்தும்
அறங்கடையிற் செல்லார், பிறர்பொருளும் வெஃகார்
புறங்கடைய ராகும் பொருள்.

---

(நாலடி.)

---

472. உறைப்புருங் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத்துணினும் ஊர்ஆற்றும் என்பர்: கொடைக்கடனுஞ்
சாஅ அயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
ஆஅஅயக் கண்ணும் அரிது.

[சாஅ அய = சாஇய. (இ. வி. 87. 14.) ஆஅஅய = ஆயிய. (இ. வி. 87.)]

---

(நன்னெறி.)

473. ஊக்கும் அறிவான் அலது பிறப்பினுள்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க! நீக்கு
பகர்ஆர் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

---

## LXXXI. பாடம்.

### மேன்மக்கள். (நல்வழி.)

474. சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி.

[ஒழிய. (இ. வி. 86. (3.)) இடாதார். (இ. வி. 95.) கடைசி அடியிலே இது ஆகும் எ-து தொக்கு நிற்கிறது.]

---

475. ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளும்அவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும் ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து.

[ஆற்றுப்பெருக்கு=ஊற்றுப்பெருக்கு. (இ. வி. 119. (3.)) குடிப்பிறந்தார், எழுவாய் நல்கூர்ந்தார் ஆனாலும். (இ. வி. 132.)]

தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற் பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றல் கடல்சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி.

---

477. இழுக்குடைய பாட்டிற் கிசைநன்று; சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தி னன்று; வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய்; பழிக்கஞ் சாத்
தாரத்தி னன்று தனி.

---

(நாலடி.)

---

478. சான்றாண்மை, சாயல் , ஒழுக்கம் இவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது, வான்றோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

---

479. இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோ டின்ன குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார்; கயவரோ
டொன்றா உணரற்பாற் றன்று.

---

## LXXXII. பாடம்.

---

### மேன்மக்கள். (நாலடி.)

---

480. கல்லாமை அச்சம் கயவர் தொழில் அச்சஞ்
சொல்லாமை உள்ளும் ஓர் சோர்வச்சம் எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்; மரத்தார்இம்
மாணாக் குடிப்பிறந் தார்.

[இம்மாணா = இவ்வகையான மாட்சிமையில்லாத.]

481. இனநன்மை, இன்சொல்லொன் றீதன்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாம், கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே உள.

---

482. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்; புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ஆற்றுதல் இன்று

---

483. எற்றொன்றும் இல்லா இடத்துங் குடிப் பிறந்தார்
அற்றத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்;
அற்றக் கடைத்தும் அகல்யா றகழ்ந்தக்காற்
றெற்றெனத் தெண்ணீர் படும்.

---

484. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்; மற் றிங்கண்
மறுவாற்றும்; சான்றோரஃ தாற்றார், தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

---

485. இசையும் எனினும், இசையா தெனினும்,
வசைதீர எண்ணுவர் சான்றோர்; விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

[பிழைப்பு=பிழைக்க.]

---

## LXXXIII. பாடம்.

### பெரியோர்—சிறியோர். (தி. குறள்.)

486 இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

487. செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.
[செய்கலாதார் = செயல் ஆகார் = செய்யமாட்டார்கள்.]

488. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

489. குணம்என்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது.

490. அச்சமே கீழ்களதா சாரம்,
எச்சம், அவாவுண்டேல் உண்டாஞ் சிறிது.

## LXXXIV. பாடம்.

### அன்பு. (தி. குறள்.)

491. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூச றரும்.

492. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

---

493. அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

---

494. என்பில் அதனை வெயிற்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

---

495. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

---

496. அன்பின் வழிய துயிர்நிலை; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

---

## LXXXV. பாடம்.

---

### அருள். (தி. குறள்.)

---

497. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம்;
பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

498. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை.
இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.

---

499. மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

---

500. அல்லல் அருள்ஆள்வார்க் கில்லை, வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

---

501. அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை,
பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லா கியாங்கு.

---

502. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லும் இடத்து.

---

## LXXXVI· பாடம்.

---

### கண்ணோட்டம். (தி. குறள்.)

---

503. கண்ணோட்டத் துள்ள துலகியல், அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

[நிலக்கு = நிலத்தற்கு. (இ. வி· 41.)]

---

504. பண்ணென்னும் பாடற் கியைபின்றேல்? கண்ணென்னும்
கண்ணோட்டம் இல்லாத கண்?

---

505. உள போல் முகத்தெவன் செய்யும்
அளவினாற் கண்ணோட்டம் இல்லாத கண்?

---

506. கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம், அஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.

---

507. மண்ணோ டியைந்த மரத்தனையர்
கண்ணோ டியைந்துகண் ணோடா தவர்.

---

508. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை உடைத்திவ் வுலகு.

---

## LXXXVII. பாடம்.

---

### புதல்வர் (தி. குறள்.)

---

509. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.

---

510. மக்கள்மெய் தீண்டல் உடற்கின்ப மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு.

---

511. குழலினிது யாழினி தென்ப, தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்.

---

512. தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

---

513. தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

---

514. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

---

## LXXXVIII. பாடம்.

---

### அரசு. (நீதிநெறி.)

---

515. குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலு மாண்பே; குடியோம்பிக்
கொள்ளுமா று கொள்வோர்க்குக் காண்டகுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

[illegible]

---

516. இன்று கொளற்பால நாளைக் கொளப்பொருள்,
நின்று குறை இரப்ப நேர்படான், சென்றொருவன்
ஆவன கூறின் எயிறலைப்பான் ஆறலைக்கும்
வேட்டுவன் வேற்றும் அலன்.

---

517. முடிப்ப முடித்தப்பின் பூசவ பூசி,
உடுப்ப உடுத்துண்ப உண்ணு, இடத்திடத்துக்
கட்டுரை கூறிற் செவிக்கேளார் கன்னியார்
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்

---

518. ஒற்றிற் றெரியா திறைப்புறத் தேர்தும்எனப்
பொருந்துரு வினையாத் தெரிதந்தும் குற்றம்
அறிவுறீத் தேர்ந்தவதே செங்கோன்மை, சென்று
முறை இடினும் செளாமை அன்று.

[தெரிதந்தும் = தெரிந்தும். (இ. வி. 124. (5.))]

---

519. ஏதிலார் யாதும் புகல இறைமகன்
கோதொரீஇக் கொள்கை முறைக்குறையு நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என் சொலார்? தாய் கொலை
சால் புடைத் தென்பாரும் உண்டு,

---

(பழமொழி.)

---

520. முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியா நேர் ஒக்கல் வேண்டும்; முறைதிரிந்து
நேர் ஒழுகான் ஆயின் அதுவாம் ஒருபக்கம்
நீர் ஒழுகிப் பால் ஒழுகும் ஆறு.

---

## LXXXIX. பாடம்.

### அரசு.

521. குடிதழீஇக் கோல் ஓச்சு மாநில மன்னன்
அடி தழீஇ நிற்கும் உலகு.

[ தழீஇ. (இ. வி. 79. 86.) ]

522. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

523. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறு நாடு கெடும்.

524. கூழுங் குடியும் ஒருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு.

525. அல்லற்பட் டாற்றா தழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

526. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி.

## XC. பாடம்.

### நடுவு நிலைமை.

527. செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப் புடைத்து.

... நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

---

529. கேடும் பெருக்கமும் இல்லல்ல; நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

---

530. கெடுவல்யான் என்பது அறிக, தன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

[கெடுவல் = கெடுவேன். (இ. வி. 83.)]

---

531. சொற்கோட்டம் இல்லது செப்பம், ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

---

532. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

---

## XCI. பாடம்.

---

### பன்னெறி. (மூதுரை.)

---

533. மடல்பெரிது தாழை, மகிழினிது கந்தம்;
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா: கடல்பெரிது,
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

[தாழை, மகிழ். (இ. வி. 152.) விடும் எ-து துணைவினை. (இ. வி. 124.)
மண்ணீர், உண்ணீர். (இ. வி. 153.) சிற்றூறல். (இ. வி. 121.)]

---

534. உருவுகண் டெள்ளாமை வேண்டும், உருள்பெருந்தேர்க்
கச்சாணி அன்னார் உடைத்து.

---

(மூதுரை.)

535. பண்டு முளைப்ப தரிசியே ஆனாலும்
விண்டுமி போனால் முளையாதாம்: கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல்.

536. அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா தொடுத்த
உருவத்தா னீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

[உருவத்தால். (இ. வி. 137*. 66.) உருவத்தானீண்ட. (இ. வி. 39.) பழா. (இ. வி. 89.) ]

537. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்:
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

538. பருவத்தோ டொட்ட ஒழுகற் றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

## XCII. பாடம்.

### காலத்தையும் இடத்தையும் அறிதல். (தி. குறள்.)

539. அருவினை என்ப உளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்.

540. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி இடத்தாற் செயின்.

ஊக்கம் உடையான் ஒடுக்கம், பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

---

542. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற.

---

543. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

---

544. கால்ஆழ் களரி நரிஅடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு.

---

## XCIII. பாடம்.

---

### மனைவி. (முதுரை.)

---

545. இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை;
இல்லாளும் இல்லாளே ஆம்ஆயின், இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல்; அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

[இல்லாள் (இ. வி. 93.) உரைக்கும் = உரைப்பாள் (இ. வி. 137.)]

---

546. கல்லாத மாந்தருக்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்;
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்; மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்; கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

[ஈன்ற (இ. வி. 82. 5.)]

---

(நன்னெறி.)

---

547. காதன் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே! ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய்! நோக்கலுன்
கண்ணிரண்டும் ஒன்றையே காண்.

[எண்ணிரண்டு = பதினாறு. (இ. வி. 159.) நோக்கலுன் = நோக்கல் தான்.]

---

(நாலடி.)

---

548. எதிரின் றெதிர்த்திற்பான் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதான் அரும்பிணி; அட்டதனை
உண்டி உதவாதான் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

---

549. குடநீர்அட் டுண்ணும் இடுக்கட் பொழுதும்
கடனீர் அறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கைஆறுக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

---

(அறநெறிச்சாரம்.)

---

550. மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டுய்ப்பின் அல்லால் ஒருவரால்
இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று.

---

## XCIV. பாடம்.

### மனைவி. (தி. குறள்.)

---

551. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

---

552. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்.

---

553. இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை?

---

554. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

---

555. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை,
இகழ்வார்முன் னேறுபோற் பீடு நடை.

---

556. சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

---

## XCV. பாடம்.

### இன்சொல் (நன்னெறி.)

557. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே பொன்செய்
த்திர்வளையாய்! பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

[நீர்வியன் உலகம் = கடல் சூழ்ந்த பெரிய பூமி. (இ. வி. 157.) செய்த = செய்யப்பட்டு. (இ. வி. 137.) வளையாய். (இ. வி. 93.) அழற்கதிர். (இ. வி. 119.) தண்ணென் கதிர். (இ. வி. 114.) என் என்னும் வினைப் பகுதி உவமைப் பொருளிலே வந்தது. (இ. வி. 158.)]

### (நல்வழி.)

558. வெட்டெனவை மெத்தெனவை வெல்லாவாம்; வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது; நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

### (நீதிநெறி.)

559. இனியவர் என்சொலினும் இன்சொலே; இன்னார்
கனியு மொழியுங் கடிதே, அனல்கொளுத்துஞ்
வெங்காரம் வெப்பத்தினு நோய்தீர்க்கும், மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

(பழமொழி.)

560. புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

(தி. குறள்.)

561. அல்லவை தேய, அறம்பெருகு நல்லவை
நாடி இனிய சொலின்.

562. இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

## XCVI பாடம்.

### தெய்வச்செயல். (நீதிநெறி.)

563. பரபரப்பி னோடு பலபல செய்தாங்
கிரவுபகற் பாழுக் கிறைப்ப; ஒருவாற்றால்
நல்லாற்றின் ஊக்கிற் பதறிக் குலைகுலைப:
எவ்வாற்றான் உய்வார் இவர்?

(நல்வழி.)

564. வருந்தி அழைத்தாலும் வாராத வாரா;
பொருந்துவன போமென்றால் போகா; இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

565. ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த ஆயினுமூழ்
கூட்டும் படி அன்றிக் கூடாவாந்; தேட்ட
மரியாதை காணும், மகிதலத்தீர்! கேண்மின்
தரியாது காணுந், தனம்.

(நீதிநெறி.)

566. தெய்வம் உளதென்பார் தீய செயப்புகிற்
றெய்வமே கண்ணின்று நின்றறுக்குந்; தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்?

567. மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறைஅறைந்தாங் கோடிப் பரக்கும்; கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினுஞ்
சென்றிசைக்குஞ் சேயார் முகத்து.

## XCVII. பாடம்.

உழவு. (நல்வழி.)

568. ஆற்றங் கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும், விழுமன்றே? ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை; கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

(தி. குறள்.)

---

569. சுழன்றுமேர்ப் பின்னது லகம்; அதனால்
உழந்தும் உழவே தலை.

---

570. உழுவார் உலகத்தார்க் காணிஅஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

---

571. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

---

572. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பார்
அலகுடை நீழ லவர்.

---

573. செல்லான் கிழவன் இருப்பின், நிலம்புலந்
தில்லாளின் ஊடி விடும்.

---

## XCVIII. பாடம்.

---

[அருணாதன் திரு அவதாரஞ் செய்த பாலகனுக்குத் தூங்குங் காலத்தில் ஓர் முனிவன் பாடியது. வீரமாமுனி.]

---

574. இருளே அறுகா, மறைவறுகா, இரவிக்கொளியாந் [திருவிழியாய.
மருளே அறுகா மூடுகின்றான்; வானும் மண்ணும் வழுவாதான்
அருளே மருளா இவ்வுலகிற் கயர்வும் ஆற அயர்விலான்
தெருளே மருளா மனத்துயிலாத் தினை நான் களிப்பத் [துயில்கின்றான்.

[எழுவாய்: அயர்விலான், பயனிலை: மூடுகின்றான், துயில்கின்றான். அருணா. (இ. வி. 156.)]

---

575. களித்த நாவில் அரும்புந்தேன் காவலெழினிதிக் கரும்புதியே!
துளித்த நானத் தேன்அரும்பத் துணர்நாண் மலர்கான், [அரும்புதிரே!
விளித்த நாகு மாக்குயில்கான், விழைதேன் பாவை அரும்புதிரே!
அளித்த நாதன் நான் களிய அன்பு தயிலாத் துயில்கின்றான்.

[அரும்புதி. (இ. வி. 84.) துணர் நாண் மலர் கான். (இ. வி. 157. 36. 64.)]

---

576. கண்பட் டிறக்கக் கண்டேனோ? கருணா கரனே, களிக்கடலே!
புண்பட் டுளைய் நெஞ்சிற்கோர் பொருவா மருந்தே, அருள் [அன்பே,
மண்பட் டலையும் கடல் அன்ன மருள் என் னெஞ்சிற் குயிர்நி , [லையே!
எண்பட் டுயர்ந்த செல்வரசே, எம்மேல் இரங்குந் தயை இது [வோ!

[களிக்கடலே (இ. வி. 154.) செல்வு=செல்வம். (இ. வி. 117.) அன்ன. (இ. வி. 109.) மருள். (இ. வி. 163.)]

---

577. வான்றோய் நயங்கள் பயந்தோய்நீ! மண்டோய் துயர்நீத் தளித் [தோய் நீ!
தேன்றோய் இன்பத் தமைந்தோய்நீ! சென்மேற் புகழப் படு [வோய்நீ!
நான்றோய் உணர்வின் உயர்ந்தோய்நீ! நான் என்றாக அவதரித்தே
னன்றோய் உடல் கொண் டன அன்பின் உணர்விட் டெனக்கும் [பணியாயோ?

[வான்றோய், மண்டோய். (இ. வி. 38. 37.) கொண்டன அன்பின் = கொண்டு, அன்ன அன்பின். (இ. வி. 41.)]

---

578. கோவிற் றிருந்த மகிழ்வோய் நீ! குலையா வயத் தெரப் பிசழ்ந் [தோய் நீ!
நாவிற் றிருந்த புகழ்மிக்க நணுகாக் காட்சிக் கிறையோய் நீ!
பூவிற் றிருந்த நாம்வாழப் பூவத் திடர்கற் றழுவோய் நீ!
ஆவிற் றிராயோ, என்னிதயத் ததற்கே உறுதி புரியாயோ?

[கோ வானத்தில். (இ. வி. 152.) வயத்து, இசயத்து, என்பவற்றில் அக்கெ டவும் அத்துச்சாரியை தோன்றவும் வேற்றுமையின் உருபு தொக்கது. (இ. வி. 66.) ஒத்துக்காண்க. இறையோய். *(இ. வி. 93.)]

579. நால்வாய்ப் புகழ்மேல் உயர்ந்தோய் நீ! நோய்வாய் மருந்திற் கனி
[வொய் நீ
கோல்வாய் கோடா நீதிநெறி கொண்டெவ் வுலகும் புரந்தோ
[ய் நீ!
வெல்வாய்க் குருதி பாய்ந்திறப்ப மெய்கொண் டாயோ? இதை
[அறியாக்
கால்வாய் இலைப்போ றியக்கிய என் கருத்திற் குணர்வை உரைத்
[தாயோ?

[வாய். (இ. வி. 36, 61, 156.) இறப்ப. (இ. வி. 86.) போறியக்கிய = போல் + இயக்கிய. (இ. வி. 38.)]

---

580. நீர்பாய் உலகிற் குய்ப்போய் நீ! உயிர்வீட் டேய்திற் குய்
[ப்போய் நீ!
சீர்பாய் பாவிற் குரையோய் நீ! திறன்கொண் டோர்வாய்க் கட
[வோய் நீ!
ஏர்பரிப் இரவிக் கொளியோய் நீ! எம்மேல் இரங்கிப் பிறந்தனை,
[நாங்
கூர்பாய் துகள்அற் றுய்வதற்குன் துணைத்தா டொழும் பண்புரை
[யாயோ?

[வீட்டெ இற்கு. (இ. வி. 35, 65, 119.) உலகு = உலகத்தார். (இ. வி. 162.)]

---

581. தேறுந் தவயின் முனிவோய் நீ! சினத்திற் கருள்செய் கனி
[வோய் நீ!
கூறுங் கலையற் றுணர்வோய் நீ! கூறுந் தொனியற் றுரைப்
[போய் நீ
மாறும் பொருள் யாவிறு நின்றே மாறு நிலைகொள் மரபோய் நீ
ஈறுந் தவிர்ந்துன் புகழ்க்கடல் ஆழ்ந் தெனக்கே கரை காட்டருளா
[யோ?

[காட்டருளாயோ = காட்டி அருளாயே. இது செய்யுள்விகாரம். (இ. வி. 41.) அற்று (இ. வி. 186.)]

---

582. ஒளிதாக் கொடுவோன் சுடர்புகழு, ஒளிதாக் கொடு டன் மணி புகழு,
கனி தாக் கொடு பற் புள் புகழுக், கமழ்தாக் கொடு தாமலர்புகழு,
தெளிதாக் கொடு நீர்ப் புனல் புகழு, நிலமே புகழும் பதியோய் நீ!
அளிதாக் கொடுநான் உனைப்புகழ அறியா மூகை உணர்த்தாயோ?

[ஒளி தாக்கு முதலியவும் பண்புத் தொகை. (இ. வி. 154.)]

---

583. என்றும் போற்றப் படுவோய் நீ! எங்கு நிறைந்தோர் குறை
[யோய் நீ!
மூன்றும் பொழுதற் றுணையோய் நீ! முக்கா லத்தோர் பொழுதோ
[ய் நீ!
நன்றுந் தன்மைத் துணை பின்றக் குணியா அருள் செய்தாய்;
[அதற்கே
ஒன்றுந் தேறு என்னிதயத் துணர்வின் காட்சி அளியாயோ?

[நீமுற்று. (இ. வி. 93.) மூன்றுன் = மூன் + துன். (இ. வி. 38. 153.)]

---

## XCIX. பாடம்.

---

### கோசலநாடு. (கம்பர்பாடியது.)

---

(முதனூல் செய்தவர்.)

---

584. வாங்கரும் பாதம் நான்கும் வகுத்தவான் மீகி என்பான்
தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்;
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனு நறவ மாந்தி
மூங்கையான் பேசலுற்றான் என்னயான் மொழியல
[உற்றேன்.

---

### வயல் வளம்.

---

585. வரம்பெலா முத்தந்; தத்து மடையெலாம்; பணிலம், மாநீர்க்
குரம்பெலாஞ் செம்பொன்; மேதிக் குழி யெலாங் கழு நீர்க்
[கொள்ளை;
பரம் பெலாம் பவளம்; சாலிப் பரப்பெலாம் அன்னம்; பாங்கர்க்
கரம்பெலாஞ் செந்தேன்; சந்தக் கானெலாங் களியின் மஞ்ஞை.

---

## பலவித ஒலி.

586. ஆறுபாய் அரவம், மள்ளர் ஆலைபாய் அமலை; ஆலைச்
சாறுபாய் ஓசை; வேலைச் சங்குவாய் பொங்கும் ஓதை,
ஏறுபாய் தமரம், நீரில் எருமைபாய் துழனி; இன்ன
மாறுமா றாகித் தம்மின் மயங்குமாம் மருத வேலி.

## மருதநிலம் இராசாத்திக்கு ஒப்பிடல்.

587. தண்டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கந் தாங்கக்,
கொண்டல்கள் முழவின் ஏங்கக், குவளைகண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத், தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கு மாதோ.

## இன்னது இன்ன இடத்தில் துயிலும் எனல்.

588. நீரிடை உறங்குஞ் சங்கம்; நிழலிடை உறங்கு மேதி;
தாரிடை உறங்கும் வண்டு; தாமரை உறங்குஞ் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை; துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்குந் தோகை.

## இன்னது இன்ன இடத்தில் ஒளி விடும் எனல்.

589. படையுழ வெழுந்த பொன்னும், பணிலங்கள் உயிர்த்த முத்தும்,
இடறிய பரம்பிற் காந்தும் இனமணித் தொகைப் பெய்த்தும்,
மிடைபசுங் கதிரு மீனும் மென்றழைக் கரும்பும் வண்டிற்
கடைசியர் முகமும் போதும் கண்மலர்ந் தொளிரு மாதோ.

## தேன் பொழிவு.

590. ஆலைவாய்க் கரும்பின் றேனும் அரிதலைப் பாளைத் தேனும்,
சோலைவீழ் கனியின் றேனும், தொடையிழி யிறாலின் றேனும்
மாலைவாய் உகுத்த தேனும், வரம்பிகந் தோடி, வங்க
வேலைவாய் மடுப்ப உண்டு மீனெலாங் களிக்கு மாதோ.

### வாசனைப் பண்டத்து மிகுதி.

591. வெண்டளக் கலவைச் சேறுங், குங்கும விரைமென் சாந்தும்,
குண்டலக் கோல மைந்தர் குடைந்தநீர்க் கொள்ளைச் சாற்றிற்
றண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டல் இட்டோடி மன்னுமகரமொய்க்குமாதோ.

### பண்ணை.

592. சேல்உண்ட ஒண்க ணாரிற் றிரிகின்ற செங்கால் அன்னம்
மால்உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால்உண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால்உண்டு துயிலப் பச்சைத் தேரைதா லாட்டும், பண்ணை.

[எழுவாய்: தேரை-பயனிலை: தாலாட்டும். செயப்படுபொருள்: பிள்ளை.]

## C. பாடம்.

### நீதிமொழி. (சீவக சிந்தாமணி.)

### அது அது ஆதல்.

593. மெய்வகை தெரிதல் ஞானம்; விளங்கிய பொருள்கள் [தம்மைப்
பொய்வகை இன்றித் தேறல் காட்சி; ஐம் பொறியும் வாட்டி
உய்வகை உயிரைத் தேயா தொழுகுதல் ஒழுக்கம்; மூன்றும்
இவ்வகை நிறைந்த போதே இருவினை கழியும் என்றான்.

### கல்விப் பெருமை.

594. கைப்பொருள் கொடுத்துங் கற்றல், கற்றபின் கண்ணும் ஆகும்;
மெய்ப்பொருள் விளக்கும்; நெஞ்சின் மெலிவிற்கோர் துணை [யும் ஆகும்;
பொய்ப்பொருள் பிறகள்; பொன் ஆம்; துணைவி ஆம்; புகழும் [ஆக்கும்;
இப்பொருள் எய்தி நின்றீர், இரங்குவ தென்னை என்றான்.

## தீமையின் விளைவு.

595. பேராசை என்னும் வித்தில் பிறந்து, பின் வினைகள் என்னும்
வேதனை மரங்கள் நாறி வேட்கைவேர் வீழ்த்து, முற்றிக்
காதலும், களிப்பும் என்னும் கவடுவிட் டவலம் பூத்து,
மாதுயர் இடும்பை காய்த்து, மரணமே கனிந்து நிற்கும்.

## நட்பாராய்தல்.

596. தொழுதகம் கையின் உள்ளும் துறு முடி அகத்தும், சோர
அழுதகண் ணீரின் உள்ளும், அணிகலத் தகத்தும், ஆய்ந்து
பழுது கண் அரிந்து கொல்லும் படையுடன் ஒடுங்கும் பற்று
ஒழிகயார் என்னும் தேற்றம் தெளிகுற்றார் விளிகுற்றாரே.

## அரசருக்கு உரிய உபாயங்கள்.

597. ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்,
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்,
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும், சூதரோ
டொற்றந் கொள்குறிக் கொற்றவர்க் கென்பவே.

## பொருளின் பயன்.

598. வென்றி ஆக்கலும், மேதக வாக்கலும்,
அன்றி யுட்கல்வி யோடழ காக்கலும்,
குன்றி னீர்மைக் குன்றென ஆக்கலும்,
பொலன்றுஞ் சரத்தி குறி பொருள் செய்யுமே.

[பொன், தங்கம், ஆசத்தையுடையவனே !]

ஒன்றினும் ஒன்றுயர்தல்.

599. பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை
தன்னின் ஆகும் தரணி; தரணியில்
பின்னை ஆகும் பெரும்பொருள்; அப்பொருள்
துன்னும் காலைத் துன்னாதன இல்லையே.

## CI. பாடம்.

### தமயந்தி புலம்பல் (அதிவீரராமபாண்டியன் பாடியது)

600. கான்றுர் உயிர்த்துணைக் கண்ணீர் கவுள் அலைப்ப,
ஊன் தேய் கணைபட் டிறுகும் பிணைத்தேன்
மான் தேர் அரசர் முடியுடைத்த வார்கழற் கால்
தோன்றல் என் கண் களிப்ப இன்னும் ஏன் தோன்றிலையே?

601. தேர் அணர் பெயர் ஏறே! திடத்தர் கோமானே!
ஆர் அணை மார்பா! அணியோன் உயிர்க்குயிரே!
கார் இருள் வாய் யான் புலம்பக் கானகத்து விட்டகன்றும்
காதலே, அம், இன்னும் இருப்பதோ நின் தண்ணளியே?
[காதலே = நிலைமையில்லை.]

602. நெஞ்சகம் வெம்பினேன், நினைந்து தட நோக்கும்
கஞ்ச மலர் முகமும் காணுது கண் பனிப்ப
மஞ்சு அனைய மெய்ப்பொலிந்த வச்சிரத்தோள் அன்றலர்ந்த
விஞ்சை பயின்று விடேன், யான் பொருதிலனோ?

603. ஞாலத் திருள்நடப்ப, நாட் கமலம் வாய் நெகிழ
வேலைத் திரை முகட்டில் வெய்யோன் எழுந்தனன், ஆல்,
மாலைக் கதிர் வடிவேல் மன்னர் பெருமானே!
காலைக் கடவ கடன் கழிக்க வாராயோ?

---

604. மன்னவனே இப்பிறப்பில் கன்றி மணந்திலனேல்
இன்னம் ஒருபிறப்பில் ஆகுநும் ஏழையென
தன்னம் தனியே இருந்து தவம் ஆற்றியும் உன்
பொன்அகலம் உள் உருகப் புல்லத் தொழுவேனோ?

---

605. வாவும் இளமான்காள், மயில்காள், மடப்பிடிகாள்,
கூவும் கரிய குயில்காள் மென்புள் இனங்காள்,
ஆவி என மேவி அகலேம் என அகன்ற
காவலன் தான் போன வழி எனக்குக் காட்டீரோ?

---

606. என்றுஉருகி இருகணீர் ஆலி உகத்
தன் தாத் தழும்பப் புலம்பித் தமியளாய்
மின்னூர் இடை நடுங்கச் செல்வாள்; விறல்வேந்தன்
பொன் ஆர் அடி நோக்கிப் பூங்கொடி போல் வீழ்ந்தழுதாள்.

---

## CII. பாடம்.

---

### ஞான உணர்வு. (தாயுமானார்.)

---

607. பொன்னை மாதரைப் பூமியை நாடிலேன்;
என்னை நாடிய என்னுயிர் நாதனே!
உன்னை நாடுவன், உன்னருள் தூவெளி
தன்னை நாடுவன், தன்னந் தனியனே.

---

608. தன்ன தென்றுரை சாற்றுவன எலாம்
நின்ன தென்றனை, நின்னிடத்தே தந்தேன்;
இன்னம் என்னை இடர் உறக் கூட்டினாற்
பின்னை உய்கிலன் பேதையன் ஆவியே.

---

609. செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்,
ஐய, நின்னதென் றென்றும் அறிவின்றி
வெய்யகாம வெருளி மயக்கமாம்
பொய்யிலே சுழன்றேன், என்ன புன்மையே!

---

610. இல்லை உண்டென்றெவர் பக்கம் ஆயினும்
சொல்லவோ, அறியாத தொழும்பன்யான்
செல்ல வேறொரு திக்கறியேன், எலாம்
வல்லநீ எனை வாழ்விக்க வேண்டுமே!

---

611. கண்ட கன்றுக்குக் காட்டுங் கதிர் எனப்
பண்டும் இன்றும். என்பா ளின்றுணர்த்திடும்
அண்டனே! உனக்கோர் பதினாயிரத்
தெண்டன் என் பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே!

---

612. உண்ட வர்க்கன்றி உட்பசி ஓயுமோ?
கண்டவர்க்கன்றி காதல் அடங்குமோ?
தொண்டருக் கெளியன் என்று தோன்றுவான்
வண்டமிழ்க் கிசைவாக மகிழ்கவே!

---

தமிழ்ச் செய்யுட் கலம்பகம்
முற்றும்.

# VOCABULARY.

## செய்யுட் கலம்பகப் பொருளகராதி.

### அ.

அ ஆ=இரக்கக் குறிப்பு. 140.
அகடு-நடுநிலைமை. 136.
அகம்-மனம். 86. 190. 341. 495. இடம். 366. வீடு. 545. 596.
அகலல் = விரிதல். 182. 484. 483. பிரிதல். 601 605.
அகழ்தல் = தோண்டுதல் 298. 483.
அகற்றல் = விலக்கல். 196. 285.
அகலம் = மார்பு. 604.
அஃகல் = சுருங்கல். 182.
அங்கம் = சரீரம். 465.
அங்கணம் = சலதாரை. 54.
அங்காத்தல்=வாயைத்திறத்தல். 22.
அசாவுதல் = தளர்தல் 423.
அசாவாமை = தளராமை. 217.
அசைதல் = தளர்தல். 420. 483.
அச்சாணி = அஞ்சாரணி. 197.
அஞ்சுதல் = பயப்படல். 53. 518. அடங்கல். 544.
அடகு = இலை. 64.
அடல் = வருத்தல். 42.
அடக்குதல் = அடக்கம். 671.
அடி = கால். 606.
அடுதல் = கொல்லல். 94. சமைத்தல். 335. 468 544. காய்ச்சதல். 282. வெல்லல். 504.
அடுக்கல் = அணி அணியாயிருத்தல். 425.
அடைதல் = சேர்தல். 127. 424. 448.
அட்டல் = சமைத்தல். 257. 398.
அணி=ஆபரணம். 200. அழகு. 293. 527. சமீபம். 361.
அணிதல் = தரித்தல். 196. 200. சிறப்பித்தல். 133.
அணிகலம் = ஆபரணம். 238. 596.
அணுகல் = அடைதல். 574.
அணை = கரை. 164.
அணைத்தல் = சேர்த்துக்கட்டல். 210.
அண்டன் = வானவன். தேவன். 611
அதர் = வழி. 210.
அதிதி = யாசகர். 398.
அமலை = ஓசை. 586.
அமரர் = தேவர். 243.
அமர்தல் = தங்குதல். 196. விரும்பல். 135.
அமிழ்து = அமுதம். 64. 421.
அமை = மூங்கில். 196.
அமைதல் } நிறைவு. 25. 156. உண்டாதல். 341.
அமைவு. } பொருந்தல். 82. 277.
அம் = அழகு. 484.
அம்மா=வியப்புச்சொல். 190.
அம்பு = கணை. 485.
அயர்தல் = செய்தல். 142. 602.
அயர்வு = துன்பம். 574.
அரக்கு = வீடு. 30.
அரசு = அரசன். 524. 568
அரம்பை = வாழைமரம். 249.
அரவம் = ஓசை. 586.
அரவு = பாம்பு. 473.
அரற்றல் = பிதற்றல். 166.
அரிதல் = அறுத்தல். 596.
அரித்தல் = தேடுதல். 21.
அரி = நெருக்கம். 590.
அரிமா = சிங்கம். 212. 485.
அருகு = பக்கம் 77. 361.
அருப்பு = இளைத்தல். 433.
அரும்புதல் = உண்டாதல். 575.
அருமை = அரிய. 140. 170. 71. முடியாமை. 217.
அருவி = ஆறு. 75. 292.
அருள் = கிருபை. 37. 177. அன்பு. 145. 574.
அலகு = அளவு. 29. 158. ஏர். 572.
அலரி = ஒருமலர். 120.
அலர்தல் = விரிதல். 197.

அலறல் = அழுதல். 145. புலம்பல். 161.
அலைதல் = திரிதல். 576.
அலைத்தல் = ஒதுக்கல். 70. 422. கெடுத்தல். 516. 600.
அல்லல்=துன்பம். 93.449. பகை. 431.
அல் = பிற. 51.
அல்லவை = பாவம். 410. 561.
அல்கல் = சிறுகல். 127.
அவதரித்தல் = பிறத்தல். 577.
அவலம் = வல்லமையின்மை. 595.
அவா = ஆசை. 235. 184. 186.
அவாவல் = விரும்பல். 264.
அவிதல் = அடங்கல். 280.
அவிழ்தல் = உடைதல். 228.
அவை = சபை. 147. 512.
அவ்வியம் = பொறாமை. 394.
அழல் = உஷ்ணம்.
அழி = மிகுதி. 272.
அழிதல்=வருந்துதல். 190 கெடுதல். 476.
அழுக்கு = பொறாமை. 318. 391
அழுக்காறு =பொறாமை. 235.
அழுங்குதல் = துன்பப்படல். 51. கெடுதல். 323. 332.
அளவு = எல்லை. 439. அளத்தல் 441. சாதனம். 535.
அளவளாவுதல் = நெஞ்சுகலத்தல். 434.
அளாவுதல்=கலத்தல். 434. 82. } கலக்குதல் 507. அளையப்படுதல்.
அளிதல் = வருந்தல். 65.
அளி = கிருபை. 463. 582. ஏழை. எளிமை. 601.
அளித்தல் = இரட்சித்தல். 575. 583.
கொடுத்தல். 602.
அற = மிக. 208.
அறம் = தருமம். 53. 311. துறவறம். 486. 561.
அறிதல் = அறிவு. 53. 144.
அறிஞர் = அறிவுள்ளோர். 200.
அறுதல் = நீங்கல். 166. 228. 335. 433. 97. 188.
தொலைதல். 48.
அறைதல் = ஒலித்தல். 74. சொல்லல். 275. அடித்தல். 567.
அற்றல் = வற்றுதல். 483. இழத்தல். 475.
அற்று = போல. 185
அற்றார் = வறியவர். 272.
அற்புதம் = ஆச்சரியம். 476.
அனிச்சம் = ஓர்மலர். 401.
அனை = ஒப்பு. 60.
அளவு. 11.
அனுபவித்தல் = நுகர்தல். 174.
அன்பு = பிரியம். 177. 491. 575.
அன்னம்-அன்னப்பட்சி. 16. 585.
அன்ன = போல. 531

## ஆ.

ஆ = பசு. 334. இரக்கக்குறிப்பு. 578.
ஆகம்-மார்பு. 598.
ஆகாரம் = இரை. 109.
ஆகாமை = முடியாமை. 460.
ஆகுதல் = உண்டாதல். 2. முடிதல். 535. 599.
ஆகுலம் = ஆரவாரம். 234.
ஆக்கம்=பெருக்கம். 231. பயன். 327. 183.
செல்வம். 176. 311. 318. 258.
ஆக்குதல்-செய்தல். 598.
ஆங்கு = அப்பொழுது. 178. 87. அவ்விடம். 337.
ஆடுதல் } ஆடல் } அசைதல். 210. 412.
கூடிப்புணர்தல். 82. கூடுதல்.
முழுகுதல். 305.
சஞ்சரித்தல். 333.
ஆட்சி = உரிமை. 62.
ஆண்மை = முயற்சி. 420.
ஆண்மைத்திறம். 422.
